விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 11 வியாழக்கிழமை (26.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 220

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கில் ஜனநாயகம் மறுக்கப்பட்டால் மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகலாம்!

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு), வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டால் அங்கு மீண்டும் ஒரு பிரபாகரனோ, பொட்டு அம்மானோ உருவாகலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் றிஷாத்துக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சரான றிசாத் பதியூதீன், நீதிமன்றத்தை அவமதித்த குற்றத் திற்காக தண்டிக்கப்பட வேண்டும் என மேல் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கும் மனு வொன்றை மன்னார் சட்ட சங்கம், காலி சட்ட சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகள் நேற்று புதன் கிழமை தாக்கல் செய்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிசாத் பதியூதீன், இம்மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்தார் என அவருக்கு தண்டனை வழங்கக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் பணிக்க வேண்டும் என மனுவில் கேட்டுள்ளனர்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக அவரை தண்டிக்க வேண்டும் என்றும் மனுவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனிதக் கடத்தலில் ஈடுபடுவோரிடம் தமிழ் மக்கள் சிக்க வேண்டாம்!

### பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 620 பேர் கடந்த 7 மாத காலப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 40 பேர் மனித கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட முகவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோஹனதெரிவித்தார்.

தமிழ் மக்களின் விடுவிப்பாளர்கள் என்ற போர்வையில் மனிதக் கடத்தலில் ஈடுபடும் நபர்களின் சதித் திட்டங்களுக்குள் பொதுமக்களை சிக்கிக் கொள்ள வேண்டாம் என்றும் பொலிஸ்பேச்சாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த படகுகளை கடந்த 11 மற்றும் 20ஆம் திகதிகளில் கடற்படையினர் கைப்பற்றியதுடன் அவற்றில் பயணித்த 138 பேரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் நீதிமன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை கண்டித்து நேற்று புதன்கிழமையும் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் றிசாத் பதியூதீன் மன்னார் நீதவானை தமது தொலைபேசியில் அழைத்து அச்சுறுத்தியதாகவும் அதன்பின்னர் ஆட்களை அனுப்பி நீதிமன்றின் மீது தாக்குதல் (20ஆம் பக்கம் பார்க்க)

## முறையான செயன்முறைகளை ஐ.நா. பின்பற்ற வேண்டும்

### இலங்கை வலியுறுத்தல்

இலங்கை நிலைமைகளை மதிப்பீடு செய்வதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட ஐ.நா.முறைமையும் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகளும் முறையான செயன் முறைகளைப் பின்பற்ற வேண்டும் என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. முறைமையும் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகளும் முறையான செயன் முறைகளை பின்பற்றுவதுடன் அதன் குறிக்கோள் அலகுகளினால் வழிப்படுத்தப்பட வேண்டும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.-இலங்கை நட்பு அதிர்ச்சியில் இந்தியா!

(புதுடில்லி)

திருகோணமலை சம்பூரில் அனல்மின் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து இலங்கையுடன் பாகிஸ்தான் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளமையானது இந்தியாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியா ருடே செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் சவுத் புளக்கிற்கு கிடைத்துள்ள இந்தச் செய்தி இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஆதரவுடன் இலங்கையில் தலையீடுகளை அதிகரிக்கும் பாகிஸ்தானின் பாரிய திட்டத்தின் ஒரு பகுதியே இந்த தந்திரோபாயமாகும்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா கடந்த வாரம் புதுடில்லியில் இருந்தார்.

அவர் இலங்கையில் பாகிஸ்தானின் அண்மைய நகர்வுகள் குறித்த விபரங்களை உயர்மட்ட அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளதாக நம்பப்படுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வாசி ஒருவரை அவுஸ். நாடு கடத்தியது

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதி ஒருவரை அவுஸ்திரேலியா நேற்று நாடு கடத்தியுள்ளது.

தஞ்சம் கோரி அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்த இலங்கைத் தமிழர் ஒருவரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கையரை நாடுகடத்தினால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் எனவும், துன்புறுத்தப்படக்கூடும் எனவும் சட்டத்தரணிகளும் உறவினர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த வாதங்களை அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் ஏற்றுக் கொள்ளவில்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு மழை பொழிந்தாலும் கனிமொழி வாழ்த்துவார்!

### இந். கம்யூனிஸ்ட் தெரிவிப்பு

(சென்னை)

குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற பிரணாப் முகர்ஜிக்கு தி.மு.க. எம்.பி கனிமொழி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முள்ளிவாய்க்காலில் குண்டு மழை பொழிந்தாலும் அவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவிப்பார் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரணாப் முகர்ஜி மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெறவில்லை.

எனவே இத் தேர்தல் முடிபை வைத்து நாடாளுமன்றத் தேர்தல் முடிபைக் கணிக்கக் கூடாது.

இந்தியாவில் தேர்தல் முடிபுகள் அறிவிக்கப் பட்டப் பின்னர் பெற்றோல், டீசல் விலை ஏற்றப்படுவது வாடிக்கையாகிவிட்டது.

இதற்கெல்லாம் காரணமான மத்திய காங்கிரஸ்-தி.மு.க. (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பொலிஸார் அதிரடி

## நல்லூரில் திருடிய நகைகளுடன் தப்பித்த கும்பல் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் கோயில் கொடியேற்றத்தில் திருடப்பட்ட நகைகளைக் கொண்டு ஹயஸ் வானில் தப்பிக்க முயன்ற கும்பல் ஒன்றினை யாழ்.பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்ட கும்பல் புத்தளம் பகுதியினை சேர்ந்தது.

இதில் நான்கு பெண்கள் உட்பட ஏழு பேர் உள்ளனர். இவர்களிடம் இருந்து 4 தங்கச் சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் தப்பிச் செல்ல முயன்ற ஹயஸ் வான் யாழ்.பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் உள்ளது என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இக்கைது நடவடிக்கை தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நல்லூர் கொடியேற்றத்தின்போது திரண்டிருந்த பக்தர்களிடம் பல இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனையை ஏற்கத்தயார்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் ஆர்ப்பாட்டத்திற்கும் நீதிமன்ற கட்டிடம் தாக்கப்பட்டமைக்கும் எனக்கு எவ்வித தொடர்புகளும் இல்லை. இது என் மீது சுமத்தப்பட்டுள்ள வீண் பழி.

விசாரணையொன்று நடத்தப்பட்டு நான் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனையென்றாலும் நான் மனமுவந்து ஏற்றுக் கொள்வேன் என்று அமைச்சர் ரிசாத் பதியூதின் தெரிவித்தார்.

நான் வடமாகாண முஸ்லிம்களுக்கு செய்யும் சேவைகளை பொறுக்க இயலாத சிலர் வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்களை துரத்துவதற்கு செய்யும் சதி முயற்சிகளில் ஒன்றே இந்தச் சம்பவமாகும்.

புலிகளுக்கு ஆதரவான சக்திகளே என் மீது சேறு பூச முயற்சிகள் மேற்கொள்கின்றன. நாட்டில் எத்தனையோ ஆர்பாட்டங்கள் நடந்துள்ளன. நீதிமன்றங்களுக்கு முன்னால் தலை நகரில் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்கள் படித்தவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் மன்னாரிலே அமைதியான முறையில் படிப்பறிவில்லாத மீனவர்கள் தங்களுக்கான உரிமைகளுக்காகவே ஒன்று கூடி அமைதி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் இச் சம்பவத்தின் பின்னணியில் நான் இருந்தேன் என்பது சோடிக்கப்பட்ட கதையாகும் என்றார் ரிசாத் பதியூதீன். (எ-11)

# 'பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்' ஜே.வி.பி. எம்.பி. முறையீடு

(மட்டக்களப்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் கிழக்குமாகாண தேர்தல் இணைப்பாளருமான சுனில் ஹந்துன்நெத்தி, மட்டக்களப்பில் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

மட்டக்களப்பில்கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று பொலிஸார் நடத்திய கூட்டத்தின் போது,

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இம் முறைப்பாட்டை செய்தார்.

தேர்தல் நடவடிக்கைக்காக மட்டக்களப்பில் தங்கியிருந்து மக்கள் விடுதலைமுன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

இந் நிலையில், நான் தங்கியிருக்கும் இடத்திற்கு இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், ரகசியப்பொலிஸாரும்சென்று எனது நடவடிக்கை தொடர்பாக அங்குள்ளவர்களிடம் விசாரித்துள்ளனர்.

நான் எப்போது வருகின்றேன்: எங்கு செல்கின்றேன் போன்ற விபரங்களையும் அடிக்கடி சென்று நான் தங்கியிருக்கும் வீட்டாரிடம் விசாரித்து வருகின்றனர்.

இது எனது பாதுகாப் பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விடயமாகும்.

இது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இக் கூட்டத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, அரியாலையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
0770556764

(089)


# வைத்தியசாலைச் சேவையில் நான்கு மதுப்பிரியர்கள்!

(யாழ்ப்பாணம்)

மது அருந்திவிட்டு வீதியில் அநாகரிகமாக நடந்துகொண்ட நான்கு இளைஞர்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவார காலம் சேவை செய்யுமாறு யாழ்.நீதவான் மா.கணேசராஜா உத்தர விட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நண்பனின் பிறந்த தினமன்று மது அருந்திவிட்டு வீதியில் அநாகரிகமாக நடந்து கொண்ட நான்கு பேரை கோப்பாய் பொலிஸார் கடந்த 23ஆம் திகதி கைது செய்தனர்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் வைத்து கைது செய்த அதே இடத்தைச் சேர்ந்த 21, 22 வயது மதிக்கத்தக்க நான்கு இளைஞர்களை நேற்று யாழ். நீதி மன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இவ் வழக்கினை விசாரித்த நீதிவான், நான்கு இளைஞர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவார காலம் சேவையில் ஈடுபட வேண்டும் என்றும், தவறினால் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் எனவும் உத்தரவிட்டார். (எ-4,11)


## A/L வரலாறு - 2012

மாபெரும் கருத்தரங்கு

இடம் : D.M.I யாழ்ப்பாணம்

காலம் : 29.07.2012 (ஞாயிறு)
31.07.2012 (செவ்வாய்)

நேரம் : காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை

வளவாளர்கள் :
M.பத்மன் B.A (HONS) HIS.SPL. MA (HISTORY)
S.சுஜிகரன் B.A (SL) கட்டணம் : 350/-

(சி-624)

## அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே

NOKIA Connecting People

## உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate ) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இமி இலக்கங்களை (IMEI Numbers ) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் வடபிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD இல.158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

**மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:–0212220293, 0214925828, 0773659359, 0777716242 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.**

எமது ஸ்ரீலங்கா (Srilanka ) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset,Memory card) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia) உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card ) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

(சி-6058)

NOKIA Connecting People
ஏக பிரதிநிதி
Softlogic Communication (Pvt)Ltd
No 4, Defonseka Road,
Colombo-05
T.P:-0777264717

வட பிராந்திய விநியோகஸ்தரான
SVM TECHNOLOGY (PVT)LTD
158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:-0212220293, 0214925828,

## கண்களில் நீர் வற்றிய...

3ஆம் வருடம்
என் மடியில்
11 ✻ 11 ✻ 1977
ஆண்டவன் பிடியில்
25 ✻ 04 ✻ 2009



5ஆம் வருடம்
என் மடியில்
14 ✻ 04 ✻ 1976
ஆண்டவன் பிடியில்
27 ✻ 07 ✻ 2007



3ஆம் வருடம்
என் மடியில்
16 ✻ 01 ✻ 1979
ஆண்டவன் பிடியில்
15 ✻ 05 ✻ 2009



முருகேசபிள்ளை
தயாளன் (அதியன்)

முருகேசபிள்ளை
ரஞ்சிதமலர்

முருகேசபிள்ளை
பிரதீபன்

ஒரு கொடியில் பூத்த – எம்
உதிரப் பூக்களே!
விடியலைத் தேடிச் சென்றீர் – விடிவதற்குள்
இருளில் மூழ்கி மறைந்தீர்!
இதழ் விழிக்க முன்பே – முழுதாய்
கிள்ளிய பாவி ஆண்டவனே!
தாய்மையின் தத்துவம் தனிமையில் தவிப்பதுவோ?
படைத்தவனே! பிடித்ததுவோ நின் செயல்?
இடி விழுந்திங்கு நடைப்பிணமானேன்
தேற்றுவார் யாருமின்றி தினம் தேம்புகின்றேன்.
மூவிரு கரங்களோடு [illegible]?

எம் உயிர் பூக்களின் பூஜை நிகழ்வு 28.07.2012 சனிக்கிழமை எம் இல்லத்தில் நடைபெறுகின்றது. தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு எம் பிள்ளைகளின் உறவுகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அம்மா : சிவபாக்கியம்
அப்பா : முருகேசபிள்ளை

இல. 15, பாரதிபுர வீதி,
விவேகானந்த நகர் மத்தி,
கிளிநொச்சி.

(சி-626)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அகிம்சையின் ஆற்றல்

ஒரு தேசத்து ராஜாவுக்கு புத்திரபாக்கியம் இல்லை. வாரிசு இல்லாத காரணத்தினால் அந்நாட்டு வழக்கப்படி பட்டத்து யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து வீதி வழியாக அழைத்து வருவார்கள். அந்தப் பட்டத்து யானை யார் கழுத்திலே மாலையைப் போடுகிறதோ அவர்தான் ராஜா. அவருக்குத்தான் முடி சூட்ட வேண்டும்.

யானை மாலையுடன் வந்து கொண்டிருந்தது. வழியிலே ஒரு துறவி வந்து கொண்டிருந்தார். முற்றும் துறந்த ஒரு முனிவருக்குச் சமனானவர். யானைக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவர் கழுத்திலே அந்த மாலையைப் போட்டது.

இப்போது துறவியை சகல அரச மரியாதைகளோடும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போகிறார்கள். எதற்காக இப்படி, ஏன் செய்கிறார்கள் என்று துறவிக்கு புரியவில்லை.

"என்னை ஏன் இப்படி இங்கே அழைத்துக் கொண்டு வந்துள்ளீர்கள்– மாலையும் கையுமாக..." என்று கேட்டார்.

"சுவாமி! இப்போது தாங்கள்தான் இந்த நாட்டுக்கு மன்னர். பட்டத்து யானை உங்களைத்தான் தெரிந்துள்ளது. இது இறைவனின் தீர்ப்பு"என்றார் அமைச்சர்.

உடனே அவர் "எனக்கு இந்த அரச பதவி தேவையில்லை. நான் ஒரு துறவி"என்றார்.

"சுவாமி... இது இறைவனின் திருவுள்ளம்... தயவு செய்து குடிமக்களின் நலன் கருதி, இந்த அரச பதவியை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்"என்றார்.

வேறுவழி தெரியாமல் துறவி சம்மதம் தெரிவித்தார். அரச பதவியை ஏற்றுக்கொண்டார்.

தாமரை இலைத்தண்ணீர் போல இவர் எதிலேயும் பற்றுதல் கொள்ளாமல் தனது மன்னர் வேலையைச் செய்து கொண்டு வந்தார்.

இப்படி ஒரு ராஜா இருந்தால், அயல்நாட்டு அரசன் அமைதியாக இருப்பானா...? உடனே படையெடுத்தான். அரண்மனையிலே இருந்த "துறவி மன்னனிடம்"அமைச்சர்கள் ஓடி வந்து விடயத்தை தெரியப்படுத்தினார்கள். "அந்நிய தேசத்து அரசன் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்திருக்கிறான்" என்றார்கள்.

"அந்த நாட்டு மன்னன் நம் நாடு மீது ஏன் போர் தொடுத்திருக்கிறான். நாம் அவனுக்கு என்ன கெடுதல் செய்தோம்" என்று கேட்டார் துறவி மன்னன்.

"அரசே! அவன் போர் தொடுப்பதற்கு எந்தவித காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. அயல்நாட்டுப் படைகள் நம் நாட்டுக்குள் புகுந்து விட்டது. தயவு செய்து எதிர்த்து போர் புரிய உத்தரவு கொடுங்கள்"என்றார்கள்.

"வேண்டாம்! அது வேண்டாம்! அவர்களை எதிர்த்து போர் தொடுக்க வேண்டாம். யாராக இருந்தாலும் சண்டை போடுவது தகாத செயல்! அமைதியாக இருங்கள்... அதுபோதும்"என்றார் துறவி மன்னன்.

"என்ன இது... இப்படியாக இவர் கூறுகிறார்... அயல் நாட்டுப் படைகள் நம் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்காமல், அமைதியாக இருக்கிறாரே..." இருந்தாலும் மன்னனின் கட்டளை. எதுவுமே செய்ய முடியாது. அமைதியைக் கடைப்பிடித்தார்கள்.

படையெடுத்துக் கொண்டு வந்த மன்னன் பார்த்தான்... "என்ன இது... யாருமே எதிர்த்து சண்டை போட வரவில்லையே என்று நினைத்து போசாமலே "கிடு கிடு"வென அரண்மனைக்குள்ளே நுழைந்து கொண்டான்... துறவி மன்னனைப் பார்த்தான்.

"அரசே! உங்கள் கூடவே சண்டை போடுவதற்காக நான் வந்திருக்கிறேன்... என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

"என்னுடன் சண்டை போடுவதால் உனக்கு எதுவும் நடக்கப் போவதில்லை. எதற்காக என்னுடன் சண்டையிடுவதற்கு ஆர்வமாக இருக்கிறாய்?" என்று துறவி மன்னன் கேட்டான்.

"நான் உங்கள் தேசத்தை என் படைகொண்டு பிடிக்கப் போகிறேன்"என்றான்.

இதைக்கேட்ட துறவி மன்னன் "கட கட"வென சிரிக்க ஆரம்பித்தார்.

"இந்தத் தேசம் உனக்கு வேண்டும். அவ்வளவுதானே... இதற்காக நீ ஏன் என்னோடு போராட வேண்டும்? இதோ இப்பொழுது முதல் நீதான் இந்த தேசத்துக்கு மன்னன். நானோ அன்றும் துறவிதான்... இன்றும் துறவிதான். வா... இந்த சிம்மாசனத்திலே உட்கார்"என்று அன்போடு துறவி மன்னன் அழைத்தார்.

இவ்வாறு கூறிவிட்டு, சிம்மாசனத்தில் இருந்து எழுந்து விலகி வந்தான். இதைப் பார்த்து சண்டையிட வந்த மன்னனுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

உடனே துறவி காலிலே "பொத்தென"விழுந்தான்.

"ஐயா! நான் பிழை செய்து விட்டேன். உங்கள் பெருந்தன்மையை தெரியாமல் போர் தொடுத்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; இரு நாடுகளுக்கும் இனிமேல் நீங்கள்தான் மன்னர். நான் உங்கள் அடிமை... என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்றார்.

கத்தியின்றி; இரத்தமின்றி; யுத்தமின்றி; அந்தத்துறவி மன்னன் இரு நாடுகளுக்கும் மன்னனானான்.

இதுதான் அகிம்சையின் வலிமை– தியாகத்தின் பெருமை. இதை புரிந்து கொள்ளாமல் போனதால்தான் இன்றைக்கு உலகத்திலே குழப்பம்; அமைதியின்மை; கலவரம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச சொத்துக்களை ஒப்படைக்காத மாகாண அமைச்சர்கள் மீது நடவடிக்கை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

தேர்தல் நடைபெறும் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களுக்கு தாம் பயன்படுத்திய அரச வாகனங்கள் மற்றும் அரச சொத்துக்களை மீள வழங்குமாறு அறிவித்துள்ளோம். பலர் அவற்றை திருப்பி வழங்கியுள்ளதோடு மீள வழங்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.ம.சு.மு.செயலாளர் அமைச்சர் சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐ.ம.சு.மு. நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் கருத்துரைக்கையில், யாராவது அரச வளங்களை மீள வழங்காமல் பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் சட்டத்தை மீறி செயற்படும் ஐ.ம.சு.மு. வேட்பாளர்களுக்கு எதிராக கட்சி என்ற ரீதியில் உரிய நடவடிக்கை எடுப்போம். கடுமையான தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்றால் அது தொடர்பில் தலையிட்டு செயற்படுவோம். சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தேர்தல் முறைகேடுகள் குறித்து தேவையற்ற முறைப்பாடுகள் செய்கின்றன. சகல மாவட்ட செயலகங்களிலும் தேர்தல் வன்முறைகள் குறித்து முறையிட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் மனைவிமார் மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கு இம்முறை ஐ.ம.சு.மு. பட்டியலில் இடமளிக்கப்படவில்லை. அரசியலில் இருந்து ஒதுங்குவதாக எழுத்து மூலம் அளித்த அமைச்சர் ஜகத் பாலசூரிய, பிரதி அமைச்சர் எம்.கே. டபிள்யு.எஸ்.குணவர்த்தன ஆகியோரின் பிள்ளைகளுக்கு மட்டுமே புதிதாக இடமளித்துள்ளதாக சு.க. செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் இதன்போது குறிப்பிட்டார். (அ-2)

# அதிபர்களுக்கான கூட்டம்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு வருகை தரும் போது பாடசாலை அதிபர்கள் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரக்கழக உறுப்பினர்கள் விபரமும் நடப்பாண்டிற்குரிய வேலைத்திட்டமும் நடப்பாண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் அடையவிருக்கும் பாட ரீதியான பெறுபேற்று வீதமும் பாடசாலையில் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு என்பவற்றின் உறுப்பினர் விபரம், பதிவு இலக்கம் என்பனவும் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களின் கடந்த 2011 ஆம் ஆண்டு வரை சம்பள ஏற்றப்படிவங்கள், நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) மாணவர்களின் பரீட்சை அடைவுமட்ட வீத அதிகரிப்புக்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கை ஆகிய தகவல்களையும் அறிக்கைப்படுத்திக் கொண்டு எடுத்துவருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 75 | 60 | 100 | 100 |
| தக்காளி | 140 | 150 | -- | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | -- | 80 | 70 | 70 |
| கரட் | 100 | 120 | 120 | 140 |
| பூசணி | 60 | 50 | 60 | 50 |
| புடோல் | 30 | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 60 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 130 | 80 | 130 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 120 | -- |
| பயற்றங்காய் | 100 | 140 | 100 | 80 |
| லீக்ஸ் | 130 | 120 | 130 | 140 |
| பீற்றூட் | 40 | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 130 | 90 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 70 | 120 | 100 | 80 |
| போஞ்சி | -- | 110 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 40 | 70 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

# இராசி பலன்

*26.07.2012*

*(ஆடி 11, வியாழக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*

*அட்டமி பின்னிரவு 12.16 மணிவரை*

*சித்திரை முற்பகல் 8.55 மணிவரை*

*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*

*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*

*சுந்தரர் குருபூசை.*

**மேடம்** பொன்னான நாள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், குடும்பத்துடன் குதூகலப் பயணங்கள் மேற்கொள்வீர்கள்,கௌரவ--மான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரும், இல்லத்தாரின் தேவையை பூர்த்தி செய்வீர்கள், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** மாமன்,மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக் குரிய தகவல்கள் வந்து சேரலாம், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறி தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோரின் பாச மழையில் நனைவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழில் சம்பந்தமாக முக்கியமானவர்களைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**துலாம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக்கொள்வத நல்லது, கொள்கையைக் கொஞ்சம் தளர்த்த வேண்டி வரலாம்.

**விருச்சிகம்** உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு** பயணவாய்ப்புக்கள் கைகூடும், இலட்சியப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

**மகரம்** எண்ணிய காரியம் எளிதில் கைகூடும், ஆடம்பரப்பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகமான நாள், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் அனுகூலமுண்டு.

**கும்பம்** உறவினர்களால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு, தொழிலில் அதிகஈடுபாடு காட்டுவீர்கள்.

**மீனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ் தாபங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, முயற்சி தாமதமாகும், பணப்பற்றாக்குறை உண்டு, ஆரோக்கியக்குறைவான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களாக பதிவு செய்யும் பொறுப்பை தவறவிடாதீர்கள்

## யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வாக்காளர் பதிவு என்பது அனைத்து தேவைகளுக்குமான முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை கிராமசேவையாளர்களும் பொது மக்களும் உணர்ந்து செயற்பட வேண்டும் என யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.**

இந்த வருடத்திற்கான வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை தற்போது யாழ். உதவித் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். உதவித் தேர்தல் திணைக்களம் ஊடாக ஒவ்வொரு கிராம சேவையாளர்களுக்கும் வாக்காளர் பதிவு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர்கள் ஊடாக வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் வாக்காளர் பெயர் பட்டியல் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

கிராமசேவையாளர்களிடம் வழங்கப்பட்ட பி.சி. படிவம் அதாவது வாக்காளர் பதிவுப் படிவம் கிடைக்காதவர்கள் யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள உதவித் தேர்தல் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். வாக்காளர் பதிவு என்பது அனைத்து தேவைகளுக்கும் முக்கியத்துவமானது. வாக்காளர் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

பெரும்பாலான பொது மக்களுக்கும் சில கிராமசேவையாளர்களுக்கும் இந்த விடயம் தொடர்பில் பெரிதாக அக்கறை இல்லை.

வாக்காளர் பதிவினை மேற்கொள்ளாத விடத்து பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால் பொது மக்கள் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

வாக்காளர் படிவங்களைப் பெற்று உரிய முறையில் பூர்த்திசெய்து கிராம சேவையாளரிடமோ அல்லது உதவித் தேர்தல் திணைக்களத்திலோ ஒப்படைக்க முடியும்.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவு நடவடிக்கையின் போது பெரும்பாலானவர்கள் விடுபட்டிருந்தனர்.

இதற்கு கிராமசேவையாளர்கள் மீது அதிகளவில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டு இம்முறையும் ஏற்படாத வகையில் கிராமசேவையாளர்கள் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்.

யாழ் தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வாக்காளராக பதிவு செய்ய தகுதியுடைய அனைவரும் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-6)




## கஞ்சா வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த இரு தென்பகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு யாழ். நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதியன்று யாழ். பிரதான தபாலகத்திற்கு அருகில் கம்பஹாவினைச் சேர்ந்த ஒருவரும் மாத்தறையைச் சேர்ந்த மற்றொருவரும் 20 கிராம் கஞ்சாவுடன் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இருவரும் யாழ். நீதிமன்றின் உத்தரவிற்கமைய இரு நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று முன்தினம் குறித்த வழக்கு மீண்டும் யாழ். நீதவான் மா. கணேசராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


இதில் குறித்த இரு சந்தேக நபர்களும் தமது குற்றத்தினை ஒப்புக் கொண்டமையால் குறித்த இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)

## தேசிய மட்டத்தில் முதலிடம்

(கரவெட்டி)

அகில இலங்கை தமிழ்த்தின போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவக்குழு குழு இசை பிரிவு II இல் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தை பெற்றது.



இப்பாடசாலை மாணவர் குழுவே கடந்த 2010 ஆம் ஆண்டு குழு இசைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

## இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியவை

வட மாகாண பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களில் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க தகைமை உடையவர்களின் விண்ணப்பங்கள் மாகாண கல்வித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளதாக வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண கல்வித் திணைக்களத்தால் இடமாற்ற விண்ணப்பங்கள் விண்ணப்பிப்பதற்கு தகைமை உடைய ஆசிரியரிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் ஆசிரியர்கள் இவ் இடமாற்ற விண்ணப்பங்கள் உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபர் ஊடாக வழங்கப்பட வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியாகும். அத்துடன் விண்ணப்பங்களுடன் முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, இடமாற்றத்தினை சான்றுப்படுத்தக் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றை இணைத்தல் வேண்டும்.

மேலும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் வலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்துக்கு அமைவாக உள்ள விண்ணப்ப படிவங்களில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் விண்ணப்ப இறுதித் திகதியான எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவையாகக் கருதப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்:-எஸ்.செல்வதீபன்)

## மயிலிட்டி மக்களுக்கான கலந்துரையாடல் நாளை

மயிலிட்டி பகுதி மக்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகத்தில் உள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மயிலிட்டி மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் கோ.சுகிர்தன் கேட்டுள்ளார். (அ-9)

## ஆடிப் பௌர்ணமி விழா

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆடிப் பௌர்ணமி விழா இம்முறை தென்மராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பதில் மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப்பண்பாட்டு விளையாட்டு அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் க.அருணாசலம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகளும் அறிஞர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது. (அ-3-29)

## வரலட்சுமி பூசை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வரலட்சுமி நோன்புப் பூசை நடைபெறவுள்ளது.

பூசைகளைத் தொடர்ந்து அடியார்களுக்கு வரலட்சுமி நோன்பு நூல் வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## க.பொ.த.(உ/த) பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கல்

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து இவ்வாண்டு க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படும்.

உரிய மாணவர்கள் அனைவரும் அன்றையதினம் தேசிய அடையாள அட்டைகளுடன் தவறாது சமுகமளித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ)

## வணிகப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் வணிகப் போட்டி 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களையும் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளுக்கு வணிகம், கணக்கீட்டுக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

## தொலைத்தொடர்பு இயக்குநர்கள் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தொலைத்தொடர்பு இயக்குநரர்களாக 3 பேர் சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 6 பிரதேசங்களில் மிதிவெடிகள் அகற்றப்பட்டன

## யாழ்.மிதிவெடி செயற்பாட்டு நிலையம் தகவல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 6 பிரதேசங்களில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ்.மிதிவெடி செயற்பாட்டு நிலையப் பொறுப்பதிகாரி வ.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 6 பிரதேசங்களில் அதாவது ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 388 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளிலிருந்து 462 கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கோரக்கன் கட்டுப் பகுதியில் 84 ஆயிரத்து 176 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் 101 கண்ணி வெடிகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, பரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்தியலிங்கம் கமம் பகுதியில் 5 ஆயிரத்து 976 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் 15 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் ஜே/228 கிராம சேவையாளர் பிரிவில் 22 ஆயிரத்து 559 சதுர மீற்றர் பரப்பளவு மிதிவெடி அகற்றப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளதோடு இந்தப் பகுதியில் 18 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஒட்டுப்போலி கிராம சேவையாளர் பிரிவில் 54 ஆயிரத்து 411 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் 2 ஆயிரத்து 417 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேபோன்று எழுதுமட்டுவாழ் பகுதியில் 31 ஆயிரத்து 320 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் மீட்கும் பணிகள் முடிபடைந்துள்ள இந்தப் பகுதியிலிருந்து 16 வெடிக்காத வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.


இவ்வாறு யாழ்ப்பாணத்தில் 85 ஆயிரத்து 731 சதுர மீற்றர் பரப்பளவிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 840 சதுர மீற்றர் பரப்பளவிலும் மிதிவெடி அகற்றி முடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகள் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசமாக கையளிக்கப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளன.

மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளது என சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசங்களில் வெடிக்காத வெடிபொருட்கள் இருக்கக்கூடும். எனவே, அது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

வடமாகாணத்தில் நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த வெடிக்காத வெடி பொருட்களின் அச்சம் தொடர்ந்து செல்கிறது. வெடிக்காத வெடிபொருட்களினை கையாண்டதில் அதிகளவில் சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

மிதிவெடி தொடர்பில் அபாயப் பலகைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் அனர்த்தங்கள் நிகழவே செய்கின்றது. எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



சுன்னாகப் பொலிஸாரினால் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் சிவில் பாதுகாப்பு தொடர்பாக கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுன்னாம் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு நிலையப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கோதாகொட வறிய மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## வீட்டின் மீது பேருந்து வீழ்ந்து விபத்து

நுவரெலியா– ஹக்கல பகுதியில் பேருந்து விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றையதினம் அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்து ஹக்கல பகுதியில் பிரதான பாதையை விட்டு விலகி பாதைக்கு அருகிலுள்ள வீடொன்றின் மீது விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் வீட்டுக்கு மாத்திரம் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் இணைப்பாளர் ஹேரந்தன ஹேமவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த் விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மன்னார் விவகாரத்தை மூடிமறைக்க அரசு முயற்சி

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

மன்னார் நீதிபதிக்கு அமைச்சர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் நாட்டின் நீதித்துறைக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அரசு இதுவரையில் நடவடிக்கை எடுக்காதது ஏன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழக்குகளை விசாரிக்க நீதிமன்றம் தேவையில்லை என்ற நிலை நாட்டில் இன்று உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சர்கள் வழக்குகளில் தீர்ப்பு மட்டுமே வழங்காதுள்ளனர்.

மன்னார் சம்பவம் மட்டுமல்லாது நாட்டில் இடம்பெற்ற அனைத்து குற்றச்செயல்கள் தொடர்பிலும் அரசு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அது அரசின் பொறுப்பு.

கடந்த வாரத்தில் நாட்டின் சட்ட ஒழுங்குகளை மீறும் வகையில் குற்றச்செயல்கள் நடந்துள்ளன. மன்னார் நீதிபதிக்கு அமைச்சரொருவர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் நாட்டின் நீதித்துறைக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்த அந்த அமைச்சருக்கு எதிராக அரசு ஏன் இதுவரையில் நடவடிக்கை எடுக்காதுள்ளது? இந்த விடயத்தை அது அப்படியே மூடி மறைக்கத் திட்டமிடுகிறது.

இதனைத்தவிர்த்து இந்தச்சம்பவம் தொடர்பில் மட்டுமல்லாது நாட்டில் இடம்பெறும் அனைத்து குற்றச்செயல்கள் தொடர்பிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக ஜனாதிபதி விசேட குழுவொன்றை நியமித்துள்ளார் எனக்கூறியுள்ளார். இதுபோன்ற பல குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நாம் நன்கு அறிந்துள்ளோம் என்றார். (அ-2)


## தவறிவிட்டது

GH5867 எனும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு சண்டிலிப்பாய்க்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 021 3214033

ச.இராமலிங்கம்,
இளைப்பாறிய அதிபர்.
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(088)



## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1972 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 1
உயரம்: 5'5"
கி.பா:-17, 1 இல் செவ்
தொழில்:- SENIOR FIELD ASSOCIATE
பட்டம் பெற்றவர் B/187

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ரேவதி 2
உயரம்: 5'11"
கி.பா:-60, 1 இல் செவ்
தொழில்:-சொந்தத் தொழில்
B/105

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அவிட்டம் 4
உயரம்: 5'3"
கி.பா:-20.25
தொழில்:-அரச தொ.நு.உத்தியோகஸ்தர்.
B/188

பிறப்பு:- 1979 இந்து
நட்சத்திரம்:-சித்திரை 1
உயரம்: 6'
கி.பா:-12
தொழில்:-பட்டதாரி முகாமையாளர். B/178

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்:-ஆயிலியம் 1
உயரம்: 5'6"
கி.பா:-39.75, 4 இல் செவ்
தொழில்:-பட்டதாரி அரச தொழில்
G/182

பிறப்பு:- 1981 இந்து
நட்சத்திரம்:-பூரட்டாதி 2
உயரம்: 5'3"
கி.பா:-22.25, 1 இல் செவ்
தொழில்:- பட்டதாரி G/185

பிறப்பு:- 1972 R.C.
நட்சத்திரம்:-பூரட்டாதி 4
உயரம்: 5'2"
கி.பா:-5.25
தொழில்:-பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு:-/சாதகம் பார்க்காமலும் சாதிமாறிச் செய்யவும் சம்மதம்.
G/189

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அச்சுவினி 4
உயரம்: 5'2"
கி.பா:-52
தொழில்:-அரச தொழில்
G/190

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் மூன்றாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் **சைவமும் விஞ்ஞானமும்** எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை கவிமணி அன்னைதாசன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் தில்லையம்பதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் மூன்றாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் வடக்கு வீதி மகேஸ்வரன் மணிமண்டபத்தில் **சைவத்தமிழ் கலாசாரமும் வழிபாடும்** எனும் தலைப்பில் மதுரகவி ப.அருளானந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் மூன்றாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு செல்வி எஸ்.சுகன்யா, வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் எ.செல்வரத்தினம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# தனியார் மயப்படுத்தப்படும் இலவசக் கல்வியை மீட்டெடுப்பதற்காகவே போராடி வருகிறோம்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் வளர்ச்சியில் ஒரே மூலதனமாக இருப்பது கல்வி மட்டுமே. அதனையும் அரசு தனியார் மயப்படுத்துமாக இருந்தால் வறிய மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்பது என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் திற்கும் பத்திரிகையாளர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பிலேயே யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நாம் முன்னர் மேற்கொண்ட கவனயீர்ப்பு போராட்டங்களின்போது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இணக்கத்தின் காரணமாக வேலை நிறுத்தத்தினை கைவிட்டோம்.

எனினும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

இப் போராட்டத்தை சம்பள உயர்வுக்காக மட்டுமே செய்வதாக சிலர் பார்ப்பது தவறு.

எமது போராட்டத்தின் முக்கிய நோக்கம் தனியார் மயப்படுத்தப்பட்டு வரும் கல்வி நிலையிலிருந்து இலவசக் கல்வியை மீட்டெடுப்பதாகும்.

இன்று இலவசக் கல்வியை இல்லாது செய்யும் நடவடிக்கையை அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றது.

தனியார் பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிலையங்கள் என்பன உருவாக்கப்பட்டு எல்லோருக்கும் பொதுவான கல்வியை தனியார் மயப்படுத்துகின்றனர். எமது பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது கல்விக்காக எமது நாட்டில் ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைவாகவே உள்ளன.

இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை காணப்படுகிறது. இதற்காக ஆசிரியர்களை உள்வாங்காமல் அப்பணமும் அரசால் சுருட்டப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளில் உள்ள பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பளத்தின் 1/3 பங்கு கூட இங்குள்ள பேராசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக 6 வீதத்தினை இதுவரை காலமும் ஒதுக்கி வந்த அரசு தற்போதைய காலங்களில் அவ் அளவினையும் குறைத்து வருகின்றது.

யாழில் உள்ளோர் தற்போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் பொருட்களின் விலையேற்றங்களின் மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அரசாங்கம் இலவசக் கல்வியை இல்லாது செய்வதானது மாணவர்களை க.பொ.த.(சா/த) பரீட்சையுடன் கல்வியை நிறுத்துமாறு வற்புறுத்துவது போன்றதாகும்.

எனினும் நாம் தனியார் மயப்படுத்தப்பட்ட கல்வியினை முற்றாக எதிர்க்கவில்லை. பணம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் கல்வி என்ற நிலை ஏற்படுத்தப்படாமல் இருக்க வேண்டும்.

குறிப்பாக இலவசக் கல்வியைப் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்கு பெற்றுக் கொடுப்பதற்காக போராடி வருகின்றோம்.

எமது மாணவர்களின் கல் வியை பாதுகாப்பதற்காகவே நாம் போராடுகிறோம். பல்கலை. மாண வர்களின் கல்வி பாதிக்கப்படும் என்ற கருத்த தவறானது. கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.(உ/த) பரீட்சையின் பெறுபேறுகளில் யாழ்.மாவட்டம் பின்தங்கி உள்ளமைக்கு கடந்த கால போராட்டத்தினால் பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களே காரணம்.

எமது இப் போராட்டத்தினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுமாயின் எதிர்வரும் காலங்களில் சனி, ஞாயிறு தினங்களிலும் எமது மாணவர்களுக்காக விரிவுரைகள் நடத்த நாம் தயாராக உள்ளோம்.

பல்கலைக்கழகங்கள் அரசியல் தலையீடு அற்றவையாக காணப்படல் வேண்டும்.

இவை தொடர்பாக மாணவர்களின் பெற்றோருக்கு விளக்கமளிக்கப்பட்டு மாணவர்களையும் பெற்றோர்களையும் எமது இப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டவுள்ளோம்.

தேசிய கல்வியினை பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் நாடு தழுவிய ரீதியில் 10 இலட்சம் கையெழுத்து திரட்டும் பணியினையும் தற்போது ஆரம்பிக்க உள்ளோம்.

அரசியல் தலையீடுகளற்ற இலவசக் கல்வியே எமது நோக்கு என அங்கு மேலும் கூறப்பட்டது. (அ-4)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

(கனகபுரம்)

ஹயஸ் வாகனத்துடன் துவிச்சக்கரவண்டி மோதிய விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரொருவர் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.


இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவது,

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தை நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபர் பின்னால் வந்த ஹயஸ் வாகனத்தைக் கவனியாது திடீரென அருகில் உள்ள ஒழுங்கை ஒன்றினுள் செல்ல முற்பட்ட வேளையே ஹயஸ் வாகனத்துடன் மோதுண்டதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த தியாகராசா (வயது 65) என்ற நபரே தலையில் படுகாயமடைந்து சுயநினைவு அற்றவராக அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-4)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மூன்றாம் திருவிழா



## அழகு சுந்தரனே

நல்லையம் பதியில் வீற்றிருக்கும் வேலவா
அபிராமித்தாயின் சுந்தர மைந்தனே
உன் எழில்கோலம் காண
ஓடோடி வரும் பக்தர் குறை
தீருமைய்யா வேலவா
உன் அற்புதக் காட்சியினைக் காண
கோடானு கோடி கண்கள்
வேண்டுமைய்யா முருகா! முருகா!

*வ.பவளகேசி, கொய்யாத்தோட்டம்*

## காத்தருள்வாய் முருகா

நல்லூரிலே வீற்றிருக்கும் நல்லைக் குமரனே
அடியவர்களைக் காத்திடும் ஆறுமுகப் பெருமானே
அசுரர்களை அழித்து தேவர்களைக் காத்திட்ட
ஆனைமுகன் தம்பியே எங்களையும் காத்திட
மயிலேறி விரைந்தோடி வா முருகா

*க.செல்வமலர், திருநெல்வேலி*

## நல்லைக்கந்தன் பாமாலை

நல்லைப்பதி உறைந்தவனே வேல்முருகா!
வல்லபைக் கணபதியின் சோதரனே!
வேதனைகள் தீர்த்திடுவாய் வேலவனே
பாரப்பா தமிழர் படும் பாடுகளை
நீ இருக்கும் நல்லைநகர்ப்பதியினிலே
கொலை, களவு, கள், காமம் ஏனப்பா?
உன் வேலுண்டு வினை தீர்க்கும்
ஈராறு கரமுண்டு
காத்திடப்பா நல்லைப்பதி வேல்முருகா!
செந்தமிழாம் உந்தன் மண்ணின் பொன்மொழியாம்
சீரழிந்து போவதேனோபாரய்யா – தமிழ்
சீரழிந்து போவதேனோபாரய்யா

*சிவசோதி,*
*தெல்லிப்பழை.*

## வந்துவிடு! தந்துவிடு!!

விளையாட வருவாயா கந்தா?– எம்
வினை தீர்க்க வருவாயா குமரா?
எந்தனை காக்கவா கந்தனே!
எத்தனை கஷ்டங்கள் காணாயோ?
நல்லைப் பதியிலே நின்றவனே!
நானிலம் போற்றிட வந்தவனே!
நாசங்கள் அறுந்திட வந்துவிடு!
நிம்மதி வாழ்வினை தந்துவிடு!

*நாதப்பிரியை,*
*ஊரிக்காடு.*

## எம் துன்பங்கள் பறக்கும்

நல்லை நகராளும் கந்தனே
அழகின் இருப்பிடமே
ஆனந்த மயமானவனே
வேல்தாங்கி வந்தெங்கள்
வினை தீர்ப்பாயே– கந்தா
உனைத் தினமும் நாம் துதிப்போமே

*சுப்பிரமணியம் ஜெயரூபன்,*
*பருத்தித்துறை.*

ரூபா பன்முக வர்த்தகம்
Colombo-office:
176A,central Road,
colombo-12
Tel:0115-8302147,0115-83219
fax:0112392412
இல.104A ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Tel:-0212228330
Fax:-021-2227036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் அவுஸ்திரேலியா செல்லும் இரகசியம் அம்பலம்

## திவயின தகவல்

(கொழும்பு)

தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் இரகசியம் அம்பலமாகியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் அகதிகளுக்கு எதிரான சட்ட மூலம் தோற்கடிக்கப்பட்டதனைத் தொடர்ந்தே அதிகளவான இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியா நோக்கிப் படையெடுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு நான்கு புலி ஆதரவு அமைப்புக்கள் அந்நாட்டு செனட் சபையிடம் உதவி பெற்றுக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் ஆயிரத்து 300 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் படகு மூலம் கிறிஸ்மஸ் தீவை அடைந்து இனச்சுத்திரிகரிப்பு, அரசியல் தஞ்சம் ஆகிய வசனங்களை மட்டும் அவுஸ்திரேலிய அதிகாரிகளிடம் குறிப்பிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆஸியில் இருந்து திரும்பியவர்கள் மீது இலங்கையில் துன்புறுத்தல்கள்

## த ஏஜ் சஞ்சிகை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் சென்று புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் மீண்டும் இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு திருப்பியனுப்பப்பட்டவர்கள் துன்புறுத்தப்படுவதாக த ஏஜ் சஞ்சிகை சுட்டிக்காட்டுகிறது.

இந்த நிலைமை அவ்வாறிருக்கையில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 150 பேர் வரை எதிர்வரும் நாட்களில் நாடு கடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இலங்கையிலும் பல அரசியல் அந்தஸ்து மறுக்கப்பட்டவர்கள் இன்னல்களுக்கு உட்படுத்தப்படுவதாக ஆய்வொன்றை நடத்திய சஞ்சிகை தெரிவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டளவில் அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு மீள அனுப்பப்பட்ட சரத் என்பவர் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை இராணுவத்தினரால் தாம் சுமார் 45 நாட்கள் சட்ட முன்னெடுப்புக்கள் எவையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அதேவேளை பல தரப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். இதுதவிர சுமித் என்பவர் தமது 4 வயது பிள்ளைக்கு முன்பாகவே கொடூரமான முறையில் தாக்கப்பட்டு 23 மாதங்களாக பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்ததாகவும் சுமித்தின் மனைவி கூறுகிறார்.

எனினும் அவர் மீது சட்ட நடவடி க்கைக்கான பதிவுகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. (அ-2)

# தொழில் வாய்ப்புக்காக மலேசியா வருவோர் விழிப்புடன் இருக்க வேண்டும்

## மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மலேசியாவிற்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வோர் ஏமாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து சுற்றுலா விசாக்களின் மூலம் இலங்கையர்கள் மலேசியாவிற்கு அழைத்துச் செல்லப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது, மலேசியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக இரண்டு இலட்சம் ரூபா வழங்கியதாக 20 இலங்கையர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தொழில்வாய்ப்பு இன்றி நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குறித்த இலங்கையர்கள் உயர்ஸ்தானிகராலயத்தில் சரணாகதி அடைந்துள்ளனர்.

எனவே மலேசியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் இலங்கையர்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 1139-முதலாம் அபொன்சோ போர்த்துக்கல்லின் முதலாவது மன்னனாக முடி சூடி லெயோன் பேரரசில் இருந்து விடுதலையை அறிவித்தான்.

★ 1788-நியூயோர்க் ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1803-உலகின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமாகியது.

★ 1847-லைபீரியா ஐக்கிய அமெரிக்கா விடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1848-மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக வீரபுரன் அப்பு தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. வீரபுரன் அப்பு கைது செய்யப்பட்டு ஓகஸ்ட் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.

★ 1891-டெஹீட்டி பிரான்சுடன் இணைந்தது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் உக்ரைனின் லுவிவ் நகரை நாசிகளிடம் இருந்து கைப்பற்றினர். அந்நகரில் இருந்த ஒரு இலட்சத்து 60 ஆயிரம் யூதர்களில் 300 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முதலாவது வி-2 ஏவுகணை பிரித்தானியாவைத் தாக்கியது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போட்ஸ் டாம் என்ற இடத்தில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிற்கிடையில் போட்ஸ்டாம் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1945-ஹிரோசிமாவில் போடப்படவிருந்த அணுகுண்டைத் தாங்கியவண்ணம் இண்டியானா பொலிஸ் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பல் டினியான் தீவை அடைந்தது.

★ 1952-எகிப்தில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் மன்னர் பாரூக் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவரது ஆறு மாதங்கள் அகவையுடைய மகன் இரண்டாம் புவாட் மன்னன் ஆக்கப்பட்டான்.

★ 1953-கியூபா புரட்சி: கியூபாவில் மொன்காடா இராணுவத் தளம் மீது பிடெல் காஸ்ட்ரோ தலைமையில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

★ 1956-அஸ்வான் அணைக்கட்டுக்கு உலக வங்கி நிதி உதவி வழங்க மறுத்ததை அடுத்து சூயஸ் கால்வாயை எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் அரசுடைமை ஆக்கினார்.

★ 1957-குவாத்தமாலாவின் சர்வாதிகாரி கார்லொஸ் அர்மாஸ் உயிரிழந்தார்.

★ 1957-இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

★ 1958-எக்ஸ்புளோரர் 4 ஏவப்பட்டது.

★ 1963-மசிடோனியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 100 பேர் வரை கொல்லப்பட்டனர்.

★ 1965-மாலைதீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முழுமையாக விடுதலை பெற்றது.

★ 1971-அப்பல்லோ 15 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1974-ஏழாண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் கிரேக்கத்தில் மக்களாட்சி ஏற்பட்டது.

★ 1994-எஸ்தோனியாவில் இருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்ற ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் முடிவெடுத்தார்.

★ 2005-டிஸ்கவரி விண்ணோடம் ஏவப்பட்டது.

### பிறப்பு

★ 1939-ஜோன் ஹவார்ட், அவுஸ்திரேலியாவின் 25 ஆவது பிரதமர்

### இறப்பு

★ 1857-ஒராசியோ பெட்டாச்சினி, யாழ்ப்பாணம் ஆயர்

### உலகவங்கி

உலகவங்கி வளரும் நாடுகளின் முதலீட்டு திட்டங்களுக்கு கடன்கள் வழங்கும் ஓர் பன்னாட்டு நிதி நிறுவனமாகும். உலக வங்கியின் அலுவல் முறை நோக்கம் தீவிர வறுமையைக் குறைப்பதாகும். இதன் அனைத்து முடிவுகளும் வெளி முதலீடு, பன்னாட்டு வணிகம் ஆகியவற்றை முன்னேற்றுவதிலும் முதலீட்டு நிதியை அமைத்துத் தருவதிலும் ஈடுபாடு கொண்டவையாக இருக்க வேண்டும்.

உலகவங்கி ஐந்து பன்னாட்டு நிறுவனங்களை உள்ளடக்கிய உலக வங்கிக் குழுமத்தின் முதன்மை நிறுவனமாகும். உலக வங்கி, உலக வங்கிக் குழுமத்தின் பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (IBRD) மற்றும் பன்னாட்டு மேம்பாட்டுச் சங்கம் (IDA) என்ற இரு நிறுவனங்களை மட்டுமே அங்கமாகக் கொண்டது. உலக வங்கிக் குழுமத்தில் இவற்றைத் தவிர மூன்று நிறுவனங்கள் அடங்கியுள்ளன. பன்னாட்டு நிதிக்கழகம் (IFC), பலதரப்பு முதலீட்டு பொறுப்புறுதி முகமை (MIGA), பன்னாட்டு முதலீட்டு பிணக்குகள் தீர்வு மையம் (ICSID) என்பனவாகும்.


உலக வங்கியும் உலக வங்கிக் குழுமத்தின் பிற அங்க நிறுவனங்களும் அமெரிக்கத் தலைநகரான வோஷிங்டன் டிசியில் தங்கள் தலைமை அலுவலகங்களை அமைக்கப் பெற்றுள்ளன.

தனி நிறுவனமான அனைத்துலக நாணய நிதியமும் சேர்ந்து உலக வங்கி குழுமம், சில சமயங்களில் பிரெட்டன் உட்ஸ் நிறுவனங்கள் என அழைக்கப் பெறுகின்றன. நியூ ஹாம்சயர் மாநில, பிரெட்டன் உட்ஸில் நடந்த ஐக்கிய நாடுகளின் செலாவணி மற்றும் நிதி மாநாட்டிற்கு பின்னர் இந் நிறுவனங்களுக்கு இப் பெயர் கிட்டிற்று.

### உலக வங்கி நிர்வாகம்

இதன் தலைவர் எப்பொழுதும் ஓர் அமெரிக்கராக இருப்பதும் அனைத்துலக நாணய நிதியத்தின் தலைவர் ஐரோப்பியராக இருப்பதும் வழக்கம்.

### டிஸ்கவரி விண்ணோடம்



ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் ஓய்வு பெற்ற மூன்று விண்ணோடங்களில் ஒன்றாகும். மற்றைய இரண்டும் அட்லாண்டிஸ் மற்றும் எண்டெவர் ஆகியனவாகும். 1984 இல் டிஸ்கவரி விண்ணோடம் முதன் முதலில் செலுத்தப்பட்ட போது அந்நேரத்தில் பயன்பாட்டில் இருந்த 3ஆவது விண்ணோடமாக இருந்தது. டிஸ்கவரி விண்ணில் பல ஆய்வுகளையும் அனைத்துலக விண்வெளி நிலையத்தை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. ஹபிள் தொலைநோக்குக் கருவி முதன்முதலில் டிஸ்கவரி மூலமே விண்ணுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### கடைசிப் பயணம்

பன்னாட்டு விண்வெளி நிலையத்தை டிஸ்கவரி அணுகுகிறது. கடைசியாக டிஸ்கவரி விண்ணோடம் பெப்ரவரி 24 , 2011 இல் விண்ணுக்குச் செலுத்தப்பட்டது. மார்ச் 9 , 2011 இல் டிஸ்கவரி விண்கலம் முறைப்படி ஓய்வு பெற்றது. இது தற்போது ஸ்மித்சோனியன் நிறுவனத்தின் தேசிய வான் மற்றும் விண்வெளி நிறுவன அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுபறிக்கு மத்தியில் ஜெனீவாவில் அறிக்கை சமர்ப்பித்தது இலங்கை

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பூகோள கால மீளாய்வுக் கூட்டத்துக்கான இலங்கை அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி செயலகத்தினால் இந்த அறிக்கை ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 10 ஆயிரத்து 700 சொற்கள் அடங்கிய இந்த அறிக்கை ஜனாதிபதி மஹிந்தவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதில் இறுதி நேரத் திருத்தங்களை ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க செய்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஒப்பமிடப்பட்டது.

இதையடுத்து மின்னஞ்சல் மூலம் ஜெனீவாவில் உள்ள இலங்கை தூதுவருக்கு அனுப்பப்பட்ட அந்த அறிக்கை அவர் மூலம் நேரடியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் பூகோள கால மீளாய்வு கூட்டத்துக்கான இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடுவின் இறுதிநாள் நேற்று முன்தினமாகும்.

இந்த அறிக்கையை தயாரித்து சமர்ப்பிப்பதில் கடைசிநேரம் வரை இழுபறி நிலை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)



சோசலிச இளைஞர் சங்கமானது தமிழ், முஸ்லிம், சிங்கள ஆகிய மூவின மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி வவுனியாவில் நடத்திய நடைபவனியின் போது... (படம்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# பதவியை விட்டதும் சதித்திட்டம் தொட்டது

## ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் புலம்பல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் ஹேமகுமார நாணயக்கார பெரும் அங்கலாய்ப்பை வெளியிட்டுள்ளார்.

தமது சொந்த ஊரான காலி மாவட்டத்திலேயே தமக்கெதிராக ஆளும் கட்சியின் சிலர் சதிச்செயல்களை முன்னெடுத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனாதிபதியின் ஆலோசகர் தரத்திலிருந்து தான் விலகியதன் பின்னரே சில நபர்கள் தமக்கெதிரான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான நபர்களின் மூளையின் நீளம், அகலங்களை காலி மாவட்ட மக்கள் அறிவார்கள். ஜனாதிபதியிடம் தங்கள் பெயரை நிலைநிறுத்திக்கொள்ள இந்த உத்தியை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

பிறரைப் பற்றி முறையீடுகளை மேற்கொண்டு அதன்மூலம் குறுகிய இலாபம் தேடும் தீய நடத்தையுள்ளவர்களே அப்படி செய்கிறார்கள் என்றும் ஹேமகுமார நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிளி. மாவட்ட மட்ட சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

**தரம் 06**

சு.கனுஜன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ச.அபிராஜ் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), து.கஜன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தரம் 07**

ச.சதுர்சன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), சு.நிக்சன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), மோ.பிரதோசன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

**தரம்08**

சி.சிவாஜினி (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ரா.யுவரூபன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), வை.மகிந்தபாலன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தரம் 09**

த.டர்சிகன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), த.டிலக்சன்(கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ம.பிரசாந் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தரம் 10**

நா.கேசவராஜ் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), பா.நிதுசா (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ந.டயானா (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தரம் 11**

ந.வதனன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), இ.கௌதமன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), த.ஜெனகராஜ் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**தரம் 12,13**

க.கீர்த்திகா (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), அ.சுவேதா (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ப.துசானி(கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி). (முற்றும்) (அ-266)


# விண்ணப்பம் கோரல்

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் லோகோ திட்டத்தின் கீழ் (LOGO PROJECT) தொழில்நுட்ப உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்) பதவிக்கு 6 மாத கால ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

*வெற்றிட எண்ணிக்கை-08*

**01. கல்வித்தகைமை:-** இரண்டு பாடங்கள் அடங்கலாக 03 விஞ்ஞானப் பாடங்களில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலும் அத்துடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் அத்துடன்

மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் கூடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இத்துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (3 வருட பகுதி நேரப்பயிற்சி பாடநெறி) அல்லது

படவரைவியல் தொடர்பாக ஒரு வருட முழு நேரகால பயிற்சி பாடநெறியை திருப்திகரமாக பூர்த்தி செய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்

**02. தொழில்சார் தகைமை:-** தொழில் நுட்பம் தொடர்பான தகைமைகள்

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்)**

வெற்றிட எண்ணிக்கை -01

**01. கல்வித் தகைமை:-** க.பொ.த (சா/த) / க.பொ.த.(உ/த) / பட்டதாரி / மொழித் தேர்ச்சி

**02. தொழில்சார் தகைமை:-** மொழிபெயர்ப்பு அனுபவம் தொடர்பான சான்றிதழ் மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து 26.07.2012 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு,

**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ***தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம்*** என தவறாது குறிப்பிடவும். குறிப்பிட்ட கல்வித்தகைமை உடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**யாழ். மாவட்டம்.**

(சி/622)


# மரண அறிவித்தல்

## விக்கினேஸ்வரன் கனகநாயகி (செல்லம்)



விடத்தற்பளை மிருசுவிலை பிறப்பிடமாகவும் நாவற்காடு, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விக்கினேஸ்வரன் கனகநாயகி 24.07.2012 அன்று திடீர் மரணமடைந்துள்ளார்.

அன்னார் விக்கினேஸ்வரன் (விக்கி) அவர்களின் அன்பு மனைவியும், அபிநயன் (மாணவன், யா/குடமியன் அ.த.க. பாடசாலை) அவர்களின் அன்புத் தாயாரும், நாகலிங்கம்- தவமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி (திடீர் மரண விசாரணை அதிகாரி), வள்ளியம்மையின் அன்பு மருமகளும், தயாபரன் (லண்டன்), தயாகுலம் (இத்தாலி), தயாசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமுதினி (லண்டன்) சிவாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தரணிகா (லண்டன்) தனுஷ்கா (லண்டன்), திஷானி (லண்டன்), விபுஷன், வினுஷன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 26.07.2012 இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சி.விக்கினேஸ்வரன்**
**(கணவர்)**

**நாவற்காடு**
**வரன்.**

(சி/623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்



பிலிப்பைன்ஸை சேர்ந்த லுபாங் தீவில் கடமையாற்றிய ஜப்பானிய இராணுவ புலனாய்வு அதிகாரியும் சிலரும் யுத்தம் முடிவடைந்த செய்தி தெரியாமல் நீண்ட நாட்கள் காட்டினுள் இருந்தவர்கள் -சில ஆண்டுகளின் பிறகே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்; அதன்போது அவர்கள் உத்தியோக பூர்வமாக தமது ஆயுதங்களை ஒப்படைக்கச் செல்லும்பொழுது

## ஒரு மீள்பார்வை 199

**யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்**

...அதேசமயம் பாசிசம், இராணுவ வெறியின் மீது அடையப்பட்ட வெற்றியானது, பலநாடுகளுக்கும் மக்களுக்கும் விடுதலை, சுதந்திரம், கைகள் ஆகியவற்றின் செல்வாக்கின் கீழ் பாசிச எதிர்ப்பு விடுதலை இயக்கம் வளர்ச்சியடைந்தது. ஆனால், அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன, இதனால் தமக்கு நேரடியான எதிரான போராட்டத்தைத் தீவிரப் படுத்தினர்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின் ஏகாதிபத்யத்தின் காலனியாதிக்க முறை சிதறி புதிய சுதந்திர அரசுகள் தோன்றும் நிகழ்ச்சிப் போக்கு கணிசமான அளவு துரித மடைந்தது. யுத்தத்திற்குப்பிந்தைய - முதல் 15 ஆண்டுகளில் மட்டும் 22 புதிய சுதந்திர அரசுகள் தோன்றின. ஆனால், இரண்டாவது 15 ஆண்டுகள் தான் தீர்மானகரமான ஆண்டுகளாக விளங்கின. முந்தையக் காலனிகள், அரைக் காலனிகள் இருந்த இடத்தில் 62 சுதந்திர அரசுகள் தோன்றின. 70-ஆம் ஆண்டுகளில் பெரும் காலனியாதிக்கப் பேரரசுகள் வரலாற்றுப் பழைமையாகிப்போயின. உலகம் முழுவதையும் தழுவிய வெல்லற்கரிய விடுதலைப்போராட்ட அலையைத் தடுத்துநிறுத்தும் சக்தியை ஏகாதிபத்யம் இழந்தது. ஏகாதிபத்தியத்தின் அந்திமக்காலம், அழியும் நேரம்

டது. இது முதலாவதாக, யுத்தத்தின் போதும் அது முடிந்த பின்னரும் சோவியத் யூனியன், போலந்து மற்ற சில அரசுகளின் நியாயமான அரசு எல்லைகள் நிலைநாட்டப்பட்டதில் வெளிப்பட்டது. உலகின் முதல் சோஷலிச நாட்டைச் சுற்றி முதலாளித்துவ நாடுகள் மட்டுமே இருந்த நிலைமாற்றப்பட்டது. சோவியத் யூனியனுக்கு எதிரான போராட்டத்திற்காக நீண்டகாலமாகத் தயார்ப் படுத்தி வந்த முக்கியத் தாக்கு முனைகளை ஏகாதிபத்தியவாதிகள் இழந்தனர்.

பாசிசமும் இராணுவ வெறியும் தோற்கடிக்கப்பட்டதானது நவீன சகாப்தத்தில் ஆக்கிரமிப்பின் அடித்தளம் சுருங்கிவருகிறது, முற்போக்குச் சக்திகளின் அடித்தளம் விரிவடைந்து வருகிறது என்று மெய்ப்பித்தது. பல மக்களினங்கள், அரசுகளின் ஒன்றிணைந்த சக்திகள் பாசிசம், இராணுவ வெறிக்கு எதிராகப்போரி

ஜப்பானின் ஆக்கிரமிப்பில் இருந்த கொரியாவில் 2 ஆம் உலக யுத்தத்தின்பின் அதன் வடபகுதியை சோவியத்யூனியன் ஆக்கிரமித்துக்கொண்ட பொழுது





லித்வேனியாவின் விடுதலைக்காகப் போராடிய விடுதலை வீரர்கள்

# யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான பாதையைத் திறந்துவிட்டது. மகத் தான விடுதலைப் போராட்ட அலை, பாசிஸ்டுகள் மற்றும் ஜப்பானிய இராணுவ வெறியர்களின் ஆக்கிர மிப்புக் கொள்கைக்கும் அவர்களின் கொடும்பாதகச் செயல்களுக்கும் மக்களின் பதிலாக அமைந்தது. பாசிச- இராணுவ வெறிக் கூட்டின் இராணுவத் தோல்வியும் பூமியெங் கும் பரவிய தேசிய விடுதலை இயக்கமும் உலக ஆதிக்கத்தை வெல்ல வேண்டும் என்ற ஜேர்ம னிய, ஜப்பானிய ஆக்கிர மிப்பாளர் களின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கியதோடுகூட, ஏகாதி பத்திய அமைப்பு முழுமைக்குமே ஐரோப்பிய நாடுகளிலும் சில ஆசிய நாடுகளிலும் சோஷலிசப் புரட்சி வெற்றியடைவும் வலிமையான உலக சோஷலிச அமைப்பு தோன்றவும் உதவியது. இதுதான் 1917 ஆம் ஆண்டு அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் உலக வரலாற்றில் நடைபெற்ற மிகப் பெரும் சம்பவமாகும்.

மேற்கு ஐரோப்பாவில் சோவியத் இராணுவத்தின் வெற்றிகள், நேச நாட்டு இராணுவங்களின் நடவடிக் ஆபத்து ஏற்படக் கூடும் என்று அஞ்சி சமுதாய அமைப்பை மேற்கொண்டு ஜனநாயக மயமாக்கவும் தடையாக இருந்தன. என்றாலும், இத்தாலி, பிரான்ஸ், மற்ற சில அரசுகளின் தேசிய சுதந்திரங்கள் மறுமலர்ச்சி பெறுவதில் வெகுஜனங்களின் போராட்டம் தீர்மானகரமான பங்காற்றியது.

சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தில் இறங்கியவுடனேயே பழைய காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தேசிய விடுதலை இயக்கம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. இந்நாடுகளில், முதலாவதாக கொரியா, வியட்நாம், இந்தியா, பர்மா, மலேசியா, சிரியா, லெபனான் ஆகிய நாடுகளின் மக்கள் தமது விடுதலைக்கு அதிக அனுகூலமான, புதிய சூழ்நிலைகள் இப்போது உருவாகி வருகின்றன என்று கண்டு அவற்றைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கு வந்தது, பெரும் பான்மையான மனித குலத்தின் மீது, தான் செலுத்திய ஆதிக்கத்தை அது திரும்பிப் பெற முடியாதபடி இழந்தது. ஒடுக்கப் பட்ட மக்களினங்களை விடுவிக்கும் சகாப்தம் பிறந்தது.



தேசிய விடுதலைப் போராளிகளின் போர் நடவடிக்கைகள்

மிகவும் பிற்போக்கான சக்திகளின் மீது இரண்டாவது உலக யுத்தத்தில் அடையப்பட்ட வெற்றியானது, முற்போக்கு மாறுதல்களுக்கும் சிக்கலான பிரதேச பிரச்சினைகளின் தீர்வு உட்பட சர்வதேச உறவுகள் துறையின் அடுத்த மாற்றங்களுக்குமான பாதையை மக்கள், அரசுகள் முன்திறந்து விட்டன. விடுதலை, தேசிய அரசுரிமை, ஜனநாய கம் மற்றும் முன்னேற்றத்தைப் பாதுகாப்பதில் இவற்றின் நெருக்க மான ஒத்துழைப்பு சமாதானம் மற்றும் மக்களுடைய பாதுகாப்பின் வெற்றியின் அடிப்படையாக அமைந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியச் செலாவணியை 6500 கோடியாக அதிகரிக்கவே ரட்டவிருவோ அமைப்பு

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையை சேர்ந்த மூன்று மில்லியன் பேர் வெளிநாடுகளில் தங்கி வாழ்கின்றனர். இவர்களினால் நாட்டுக்கு அந்நியச் செலாவணியாக 6 ஆயிரம் கோடி ரூபா கிடைக்கிறது. இதனை 6 ஆயிரத்து 500 கோடி ரூபாவாக மாற்றும் நோக்குடனேயே ரட்டவிருவோ என்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது என வெளிநாட்டு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் உன்னத பணியில் ஈடுபட்டுள்ள வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் அவர்களது குடும்ப நலப்பணிகள் மற்றும் அக்குடும்பங்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையை கருத்தில் கொண்ட அமைப்பாக ரட்டவிருவோ என்ற அமைப்பை உருவாக்கும் நோக்குடன் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ் அமைப்பானது பிரதேச செயலகப் பிரிவு மற்றும் தேசிய மட்டம் வரை விரிவுபடுத்தப்பட்ட அமைப்பாகும். இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சுமார் 3 மில்லியன் பேர் சென்று தங்கியுள்ளனர்.

இதில் தொழில் வாய்ப்பிற்காக 1.7 மில்லியன் பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். மிகுதி 1.3 மில்லியன் பேர் புகலிடக் கோரிக்கையாளர்களாக சென்றுள்ளனர்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்கு சென்றவர்களினால் நாட்டுக்கு 6 கோடி ரூபா அந்நியச் செலாவணி கிடைக்கின்றது.

இதனை எதிர்காலத்தில் 6 ஆயிரத்து 500 கோடி ரூபாவாக அதிகரிக்கும் நோக்குடன் எமது அமைப்பு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் ஒரு அங்கமாக இந்த ரட்டவிருவோ என்ற அமைப்பு உருவாக்கப்படுகின்றது.

மேலும் வடமாகாணம் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு பாரிய அபிவிருத்தியை கண்டு வருகின்றது. வீதி புனரமைப்பு பணி மிகவும் துரிதகதியில் இடம்பெறுவதாக பெருமிதப்பட்டார்.

நீண்ட நேரமாக அமைச்சர் டிலான் பெரேரா உரையாற்றியதனால் கலந்து கொண்ட விருந்தினர்கள் உட்பட அனைவரும் சலிப்படைந்த நிலையில் அரங்கில் அமர்ந்திருந்தனர். இறுதியில் தமது கைகளைத்தட்டி அமைச்சரின் உரையை முடிவிற்குக் கொண்டு வந்தனர்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

## சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மேற்கு பருத்திக்கலட்டி ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை விழா நடைபெறவுள்ளது.

காலை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமுறைப்பாராயணத்துடன் ஆரம்பமாகி மாலை விசேட பூசை, சிறப்பு சொற்பொழிவுகள் என்பனவும் நடைபெறும்.

இன்று தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை வரை வன்றொண்டர் வாரம் என்பதால் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும்.

இறுதி நாளாகிய முதலாம் திகதி சமய அறிவுபோட்டி, பரிசில் வழங்கல் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறுமென ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## சைபர் குற்றச்செயல்களை தடுக்க இலங்கையும் மாலைதீவும் இணக்கம்

(கொழும்பு)

குற்றச்செயல்களை தடுக்க இலங்கையும் மாலைதீவும் இணக்கம் வெளியிட்டுள்ளன.

தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் பாரியளவில் இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட சைபர் குற்றச்செயல்களுடன் மாலைதீவு பிர்ஜைகளுக்கு தொடர்பு இருப்பதாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு பிரஜைகள் இலங்கையில் இணைய குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணையத்தின் ஊடான நிதி மோசடிகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் கடன் அட்டை மற்றும் நன்கொடை அடிப்படையில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களை தடுக்க இரு நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு தேர்தலில் போட்டியிடுகின்றோம்

### பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் ஒரு கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பாகும். எனவே, கிழக்கு மாகாணத்தில் எமது கட்சியின் வெற்றி நிச்சயம் என்று மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் ஏனைய கட்சிகள் ஏதாவது ஒரு இனத்தை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால், ஐ.ம.சு.கூட்டமைப்பு மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அந்த வகையில் அம்பாறையில் சிங்களவர் ஒருவரும் மட்டக்களப்பில் தமிழரும் திருகோணமலையில் முஸ்லிம் ஒருவருமாக மூவினங்களையும் சேர்ந்தவர்களே முதன்மை வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

எனவே, மூவின மக்களினதும் வாக்குகளை பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அமோக வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை. இந்த தேர்தல் நீதியானதும் சமாதானமானதுமான முறையில் நடைபெற்று வெற்றியை எமது கட்சிக்கு பெற்றுத்தரும் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும்

### உயர்கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் பணிப்புரை விடுக்கையில்,

இசட் புள்ளி பெறுபேறுகளினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி உயர்கல்வி அமைச்சரிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய பல்கலைக்கழகங்களில் தரவுகளை திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## விற்பனைக்கூடத்தை அமைப்பது தொடர்பில் ஆராய்வு

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்தினது உற்பத்திகளின் காட்சி அறை விற்பனை கூடத்தை பத்தரமுல்லவில் அமைப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி சபைக்கு சொந்தமான வளாகத்திற்கு நேற்றையதினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதற்கு அமைவாக கொழும்பு பத்தரமுல்ல நகர அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பகுதியில் மேற்படி காட்சியறை விற்பனை கூடங்களை வாடகை முறையில் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்துடன் அங்கு கித்துள் சார்ந்த உற்பத்திகளையும் காட்சிப்படுத்தி விற்பனை கூடம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (அ-2)





அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலும் அறநெறிப்பாடசாலைகளுக்கு சீருடை வழங்கும் நிகழ்வும் அண்மையில் யழ/இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறநெறிப்பாடசாலை ஆசிரியை ஒருவருக்கு சுருதிப்பெட்டி, தாளம், சீருடை, பாடப்புத்தகம் ஆகியவற்றை வழங்குவதையும் உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் அருகில் நிற்பதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை ஒழித்தவர் ரணில்

## அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனநாயகத்தை இல்லாதொழித்த கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாட்டில் ஜனநாயகத்தை எவ்வாறு நிலைநாட்டுவார் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிகொத்தவின் கதவுகளை மூடி தலைமைப் பதவி தெரிவினை ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை என ரணில் தீர்மானித்துள்ளார். இவ்வாறான ஓர் நிலையில் ஆளும் கட்சியின் ஜனநாயகம் பற்றி கருத்து வெளியிட உரிமையில்லை.

ஆளும்கட்சி வெற்றிகரமாக பிரசாரங்களை ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் கடந்த தேர்தல்களைப் போன்றே மிகவும் மந்த கதியில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளோம்.

கட்சியின் ஜனநாயகத்தை இல்லாதொழித்த ரணில் நாட்டு ஜனநாயகம் பற்றி எவ்வாறு பேசுவார் எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்- கல்வி அமைச்சர்

(கொழும்பு)

ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகள் திட்டமிட்டபடி குறித்த தினத்தில் நடத்தப்படும். எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைகள் பிற்போடப்படமாட்டாது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதன் பெறுபேறுகள் ஒரு மாதத்திற்குள் வெளியிடப்படும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் திட்டமிட்டபடி டிசெம்பர் மாத இறுதிக்குள் வெளியிடப்படும். பரீட்சைத் திணைக்களம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளது.

2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் 2011 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இருப்பின் அவர்களது விண்ணப்பங்களை தொலைநகல் மூலம் அனுப்ப முடியும்.

இவ்விண்ணப்பதாரிகளுக்கென பரீட்சைத் திணைக்களம் ஐந்து நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு 14 விண்ணப்பப்படிவங்கள் இதுவரை பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# அரசியல் கைதிகள் இனிமேலும் இறந்தால் சர்வதேச சமூகமும் பொறுப்பேற்க வேண்டும்

## மனோகணேசன் தெரிவிப்பு




(கொழும்பு)

அரசியல் கைதிகள் நாளை இறப்பார்களேயானால் அதற்கான பொறுப்பை இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள் தொடர்பாக வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்து கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகோதரர் நிமலரூபன் இயற்கையாக மரணிக்கவில்லை. அவர் திட்டமிட்டு அடித்து கொல்லப்பட்டுள்ளார். இது மாத்திரமல்ல மேலும் ஒரு அரசியல் கைதியான டில்ருக்சன் என்பவர் ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்றோ நாளையோ மரணித்தாலும் கூட ஆச்சரியப்பட முடியாது. ஏனெனில் அந்தளவு மோசமாக தாக்கப்பட்டுள்ளார். இன்னும் பலர் மோசமாக தாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சுகாதார வசதிகள் வழங்கப்படாமல் மருத்துவ உதவிகள் வழங்கப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் சாகவிடப்பட்டுள்ளார்கள்.

ஆகவேதான் சில தமிழ் கட்சிகள் ஒருமித்த கருத்துக்கு வந்துள்ளோம். அதாவது இலங்கையில் இடம்பெற்ற போர்தான் இந்த படுகொலைக்கும் காரணமாக இருக்கின்றன. எனவே, எமது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டாலும் கூட அதற்காக தலையிடாவிட்டாலும் கூட இணைத் தலைமை நாடுகள் மற்றும் அமெரிக்காவும் கனடாவும் ஜப்பானும் நோர்வேயும் சாகக் கிடக்கும் எமது அரசியல் கைதிகளையாவது மீட்டுத்தர வேண்டும்.

ஏனெனில் இங்கு இடம்பெற்ற போருக்கு இந்தியா உட்பட இணைத்தலைமை நாடுகள் அனைத்தும் வெளிப்படையாக தமது பங்களிப்பை செலுத்தியதை நாம் கண்டு கொண்ட உண்மை. இதன் தொடர்ச்சியாக தான் இந்த கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார். (அ-2)

# சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்றவர்கள் கைது

(மன்னார்)

சல்லிசம்பல் தீவு கடற்பரப்பு வழியாக சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு செல்ல முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண் மற்றும் பெண் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை உப்புவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிவேக கட்டளை 15 என்ஜின் பூட்டப்பட்ட படகு மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கி 7 என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை படகுமூலம் இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றதாக கூறப்படும் இலங்கையர் எட்டுப்பேர் மன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


# UNIVERSITY OF JAFFNA

## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following work.

| Work/ Service Details | Security deposit (Rs) | Non-refundable deposit (Rs) | Approximate direct cost of the work (Rs.in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Rehabilitation and refurbishment of a Seminar Hall, Language and E-Learning Laborataries for Staff Development Centre | 30,000.00 | 750.00 | 3.3 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the *Deputy Registrar/ Capital Works & Planning Unit University of Jaffna* upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till *03.08.2012.*

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner or the envelop and sent by registered post to reach the *Registrar, University of Jaffna. P.Box 57, Thirunelvely, Jaffna* or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.30 p.m on 09.08.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.
20.07.2012

Registrar
University Of Jaffna.

(C-579)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்புடன் அதிகரித்துவரும் மோதல், புதுடெல்லி எதிர்கொள்ளும் புதிய சவால்

> **"இந்தியாவைப் பொறுத்தளவில், இலங்கை அரசாங்கத்துடன் நீடித்த தொடர்பைப் பேணுவதற்கான கொள்கைப்பாட்டை உருவாக்குவதைத் தவிர வேறொரு தெரிவையும் கொண்டிருக்க முடியாது"**

பூகோள வல்லரசாகும் இந்தியாவின் குறிக்கோளுக்கு அதன் அயல் நாட்டில் இருந்து தற்போது புதிய சவால்கள் ஏற்பட்டுள்ளதற்கு போதிய சாட்சியங்கள் காணப்படுகின்றன.

அண்மைய காலங்களில், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை இந்தியா முன்னெடுத்துள்ளமை, இலங்கை அரசாங்கத்துக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா இலங்கையின் அயல் நாடாக உள்ளதற்கு அப்பால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுத் திட்டத்தின் உறுப்பு நாடாகவும் உள்ளது.

ஒரு கட்டத்தில், இலங்கை அரசாங்கம்மீது இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது. இத்தகவலை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், யூன் 29 அன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது தெரிவித்திருந்தார்.

> **நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டிற்கு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு சபை செயலகத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் பிரசாத் ரௌத்திரி**

மார்ச் 2012 இல் கூட்டப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த இந்தியா மீது விசனம் கொள்ளக்கூடாது என்ற கட்டாயநிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

அடுத்த கட்டத்தில், இந்தியாவின் அழுத்தமானது இராஜதந்திர ரீதியாகப் பார்க்கும்போது பலவீனமான நிலையில் காணப்படுகிறது.

தற்போது இலங்கையை ஆளும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்த வெற்றி மட்டுமே அதன் சாதனையாக காணப்படுகிறது.

இலங்கையில் தற்போதைய பொருளாதார நிலை மிகவும் பலவீனமடைந்துள்ளது.

அதேபோன்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆளும் திறனும் பலவீனமாகவே உள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களின் மீட்பராக உள்ளார் என்ற கருத்தை விதைப்பதற்கான முயற்சி தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது.

13 வது திருத்தச் சட்ட அமுலாக்கம், கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இந்தியா கொடுக்கும் அழுத்தம் மற்றும் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் போன்றவற்றில் வெற்றி கொள்வதை நோக்காகக் கொண்டே "இலங்கை ஜனாதிபதி சிங்கள மக்களின் மீட்பர்" என்பதை முதன்மைப்படுத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு எல்லைக்கு அப்பால் செல்லவில்லை என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல், நேர்மையான மீளிணக்கப்பாட்டு நடவடிக்கைகள் போன்ற முக்கிய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

இவற்றுக்கு அப்பால், போரால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காக இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 50 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் உதவி மற்றும் 30 மில்லியன் டொலர் பெறுமதியான இந்திய அரசாங்கத்தின் பிறிதொரு மானிய உதவித் திட்டம் என்பன முற்றுமுழுதாக தமிழ் மக்களை சென்றடையவில்லை.

தமிழ் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கம் நில அபகரிப்பை மேற்கொண்டு சிங்களக் குடியேற்றங்களை அமைத்து அவற்றில் சிங்களப் பொது மக்கள் மற்றும் இராணுவத்தினரைக் குடியேற்றி வருவதாகவும் இடம்பெயர்ந்த மக்களுக்கான இந்திய அரசாங்கத்தின் வீட்டுத்திட்டம் மிக மெதுவாக அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கை மீதான இந்திய அரசாங்கத்தின் அழுத்தம் சிங்கள மனோநிலையால் தட்டிக்கழிக்கப்படுகின்றது என்பதே உண்மையாகும்.

நாட்டில் 13 வது திருத்தச்சட்டமும், அதற்கு அப்பாலான சட்டமும் அமுல்படுத்தப்படும் என இலங்கை ஜனாதிபதி இந்தியாவிடம் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதில் இந்தியா இராணுவ உதவிகளை வழங்கியதாகவும், இலங்கை ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

தற்போது இந்தியா எலும்பை வாயில் கவ்வி வைத்திருக்கும் நாய் போன்ற இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. என யூலை 09 அன்று வெளியாகிய த சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை விடயத்தில் இந்தியா கவலை கொள்வதற்கு சில தெளிவான காரணங்கள் உள்ளன.

இலங்கையில் இந்தியா தொடர்பாக எவ்வாறான அபிப்பிராயம் காணப்படுகிறது என்பதை வெளிக்காட்டுவதற்கான கருத்து வாக்கெடுப்புகள் எதுவும் இடம்பெறவில்லை.

ஆனால், பாகிஸ்தானிய மக்கள் அமெரிக்கா தொடர்பான எவ்வாறான எண்ணப்பாட்டைக் கொண்டுள்ளார்களோ அதேபோன்றே இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் மக்களும் இந்தியா தொடர்பில் காழ்ப்புணர்வை கொண்டுள்ளார்கள் என்பதை பல்வேறு பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்களின் ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் மூலம் அறிய முடிகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களது திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தியா ஒற்றை நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. ஆனால், இலங்கையின் ஆளும் அரசாங்கம் மீளிணக்கப்பாடு மற்றும் மீள் கட்டுமான நடவடிக்கை தொடர்பில் எதிர்மறை அணுகுமுறையைக் கொண்டுள்ள அதேவேளை பிரதான எதிர்க்கட்சிகூட இதற்கான மாற்று வழி ஒன்றை வழங்கவில்லை. தற்போது சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கையின் முன்னைநாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை எடுகோளாக எடுத்துக் கொள்ளலாம்.

அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர். இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர்போல் தன்னைத் தானே காண்பித்துக் கொண்டதுடன் ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு "அரேபிய மறுமலர்ச்சி" ஒன்றை நடத்த வேண்டும் எனவும் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை விட ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை மறுப்பதில் பொன்சேகா உறுதியாக உள்ளார்.

இந்த நிலையில் இப்போர்க் குற்றச் சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் அனைத்துலகச் சமூகத்திற்கு பதிலளிக்கக் கூடாது என்பதில் சரத் பொன்சேகா உறுதியாக உள்ளார்.

கொழும்பிலிருந்து மேனன் புறப்பட்டு சில நாட்களுக்குள் இலங்கை ஜனாதிபதி நாட்டிலுள்ள இராஜதந்திரிகளை ஒன்றிணைத்து முக்கிய கருத்தரங்கொன்றினை நடத்தினார்.

மேற்குலகில் செயற்படும் விடுதலைப்புலிகளுக்கு சார்பான புலம்பெயர் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் பரப்புரைகளை முறியடிப்பதற்கு "ராஜதந்திர நகர்வுகளை மாற்றுதல்" என்பது தொடர்பாக இக்கருத்தரங்கில் கலந்துரையாடப்பட்டது.

நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பில் மற்றையவர்களுக்கு உந்துதலை வழங்குவதில் ராஜதந்திரிகள் தயார் நிலையில் இருப்பதுடன் விருப்பத்துடனும் ஆளுமையுடனும் செயற்பட வேண்டும் எனவும் இக்கருத்தரங்கில் இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கை அரசாங்கம், "மாற்றம் எதுவும் இல்லை" என்ற செய்தியை உலக நாடுகளுக்கு வழங்க முயற்சிக்கிறது என்பது தெளிவாகும். இந்தியாவைப் பொறுத்தளவில் ராஜபக்ச அரசாங்கத்துடன் நீடித்த தொடர்பைப் பேணுவதற்கான கொள்கைப்பாட்டை உருவாக்குவதைத் தவிர வேறொரு தெரிவையும் கொண்டிருக்க முடியாது.

இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிப்பது இந்தியப் பிரதமரின் அலுவலகத்தைப் பொறுத்தளவில் மோசமான நிலைப்பாடாக இருக்கமாட்டாது.

## இலங்கையை அனுசரிப்பதைத் தவிர இந்தியாவுக்கு வேறுவழியில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் வசிக்கும் இலங்கையரை லெபனானுக்கு அழைத்துவர ஏற்பாடு

## வெளிவிவகார அமைச்சு தகவல்

சிரியாவில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அங்கு வசிக்கும் இலங்கையர்களை லெபனானுக்கு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது 50 இலங்கையர்கள் வரை சிரியாவில் வசிக்கின்றனர்.

இவர்கள் தொடர்பாக லெபனானிலுள்ள இலங்கை தூதராலயம் ஊடாக அடிக்கடி விசாரித்து கண்டறியப்படுவதாக வெளி உறவுகள் அமைச்சின் தொடர்பாடல் பிரிவின் மா அதிபர் சரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

லெபனானுக்கு இலங்கையர்களை கொண்டு வருவதற்கு தேவையான வசதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையென்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து தங்கி இருக்க இயலாதென்ற சூழ்நிலை உருவானால் அவர்கள் துரிதமாக லெபனானுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

லெபனானின் இலங்கை தூதரக அதிகாரிகள் இதுபற்றி தொடர்ச்சியாக அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமைகளை கேட்பதாகவும் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தம் ஆரம்பமாக முன்னர் பெருந்தொகையான இலங்கையர்கள் அங்கு இருந்ததாக லெபனானில் உள்ள இலங்கை தூதரக அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் யுத்தம் மூண்ட பகுதிகளில் வசித்த இலங்கையர் அங்கிருந்து ஏற்கனவே லெபனானுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப சர்வதேச புலம்பெயர் அமைப்பு, சர்வதேச தொழிலாளர் நிறுவனம், கரிடாஸ் நிறுவனம், வெளிநாட்டுவேலைவாய்ப்புபணியகம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தையும் நடத்தப்படும். (அ-2)

# வடமாகாண மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தின் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் வடமாகாண மீன் உற்பத்தியில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு ஏற்ற வகையில் 22 மீன்பிடி படகுகள், அத்தியாவசிய மீன்பிடி உபகரணங்கள் உட்பட 15 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இடையே அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் வடமாகாண மீனவர்கள் நாட்டின் 43 சதவீத மீன் உற்பத்தியினை மேற்கொண்டார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீன்பிடித்துறையினை மேம்படுத்துவதற்காக 50 கோடி ரூபா நிதியினை செலவிட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கையில் உள்ள மீன்பிடித்துறைமுக பகுதிகளை ஆழமாக்குவதற்கான விசேட தொழில்நுட்பத்துடனான கப்பல் ஒன்றை நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. இந்த கப்பலின் பெறுமதி 125 கோடி ரூபாவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த பணிகளை மேற்கொண்டு வரும் ருகுணு புத்தா என பெயரிடப்பட்டுள்ள கடலை ஆழமாக்கும் கப்பல் கூட 23 வருடங்களுக்கு முன்னர் ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புத்த பிக்குமாரின் எதிர்ப்பினால் ஜும்மா பள்ளிவாசல் மூடப்பட்டது

குருணாகல் தம்பகம என்ற இடத்தில் அமைந்துள்ள அல் அக்ரம் ஜும்மா பள்ளிவாசல் புத்த பிக்குமாரின் எதிர்ப்பினால் மூடப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவிலேயே இடம்பெற்றுள்ளது.

ஜும்மா பள்ளிவாசலுக்கு எதிராக நீண்டகாலமாக புத்த பிக்குமாரினால் எதிர்ப்புகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டுள்ளன. திடீரென பிக்குமாரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரும் பள்ளிவாசலுக்கு முன்பாக பிரித் ஓதியுள்ளனர். இதனையடுத்து பள்ளிவாசல் நிர்வாகிகள் வெல்லவ பொலிஸிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து வந்து பள்ளிவாசலை மூடும்படி கூறியதாக மேல் மாகாணசபை உறுப்பினர் முஜுபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது குறித்த வெல்லவ பொலிஸார் கூறுகையில், பாலர் பள்ளியாக நீண்டகாலமாக இயங்கி வந்த மேற்படி இடத்தில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை கண்டித்து அப்பிரதேச மக்களும் பிக்குமாரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் இரு தரப்பு பாதுகாப்பினை கருத்திற்கொண்டு பள்ளிவாசலை மூடிவிடுமாறு அங்கிருந்த நிர்வாகிகளுக்கு கூறினோம்.

அத்துடன் அங்கிருந்த பிக்குமாரையும் பிரதேச வாசிகளையும் பள்ளிவாசல் நிர்வாகிகளையும் இன்று புதன்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதுடன் குறிப்பிட்ட இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கியுள்ளோம் என்றனர். (அ-2)

# சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உயர்வு

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் உயர்வு ஏற்பட்டுள்ளதாக கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சட்டவிரோத பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது முதல் இதுவரையில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கிழக்கின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் சட்டவிரோதமான முறையில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக் தெரிவித்துள்ளார். (அ-2)

# மட்டக்களப்பில் கூட்டமைப்பு வேட்பாளருக்கு அச்சுறுத்தல்

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

சட்டவிரோத தேர்தல் பிரசாரம் குறித்து இதுவரை 12 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அச்சுறுத்திய சம்பவமொன்று மட்டக்களப்பில் பதிவாகியுள்ளது. மேலும் அரச வளங்கள் பயன்பாடு, சட்டவிரோத பேரணி மற்றும் பிரசாரம் ஆகியவை குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவற்றை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# பாதசாரிகள் கடவை சட்டம் அமுலுக்கு வரும்

பாதசாரிகள் கடவை தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டத்தை வலுப்படுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.


பாதசாரிகள் கடவை தவிர்ந்த வேறிடங்களில் வீதியை கடப்பதால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் முதல் இந்தச் சட்டம் கடுமையாகக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இது நடைமுறைப்படுத்தப்படும்.

பாதசாரிகள் கடவையின் இரு புறத்திலும் 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் பாதையை கடப்பவர்களுக்கு எதிராக விசேட சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தவறான முறையில் வீதியை கடப்பவர்கள் உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் நீதிமன்றத்தினால் 100 ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)



வடமாகாண கணக்காய்வு முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி உரையாற்றுவதையும் மாகாண நிதியமைச்சின் செயலாளர் என்.மனோரஞ்சன், மத்திய அரசாங்கத்தின் கணக்காய்வாளர் நாயகம் ஜி.தேவநாயகம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

171

## பீர்பால் கதைகள்

### பெண்ணைப் பெற்ற தந்தை



ஒருநாள் பீர்பால் அக்பரது அரசவையில் வருத்தத்துடன் நுழைந்தார். என்ன விடயம் பீர்பால்? அக்பர் கேட்டார். பாதுஷாவே! எனது மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்பொழுதிலிருந்து நான் எப்பொழுதும் வருத்தமாகவே இருக்கிறேன். ஏனெனில், எங்களது குலத்தில் பெண்ணைப் பெற்றெடுத்த தந்தையர் ஆனந்தமாக இருக்கமாட்டார்கள்! என்று அக்பரிடம் பீர்பால் சொன்னார்.

என்ன மடத்தனம்! எனக்கு இந்து மதத்தில் உள்ள நிறைய பெண்களைப் பெற்ற தந்தையரைத் தெரியும். அவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாகத் தான் இருப்பர்! அக்பர் இவ்வாறு ஊக்கப்படுத்தி கூறினார்.

இல்லை! உங்களுக்கு எல்லாம் தெரியாது. எங்கள் குலத்தில் ஒரு நல்ல மணமகனைத் தேடுவது மிகவும் சிரமமான காரியம். அவ்வாறு அமைந்தாலும்கூட மணமகனின் தந்தை திருமண வேலைகளில் ஏதேனும் குறையைக் கண்டுபிடிப்பார்.

அதனால் பெண்ணின் தந்தை அவளுக்கு மணம் முடித்த பின்பும் கூட மகிழ்ச்சியாக இருக்க மாட்டார்! பீர்பால் சோகமாகக் கூறினார்.

கவலைப்படாதே பீர்பால்! நான் உனது மகளின் திருமணத்திற்கு அனைத்துக் காரியங்களையும் செய்கிறேன். இந்த முகலாயப் பேரரசில் பீர்பால் எப்போதும் மகிழ்ச்சியாகக் காணப்பட வேண்டும்! என்றார் அக்பர்.

அக்பர் எவ்வளவு தேற்றியும் பீர்பாலின் முகத்தில் குடியிருந்த சோகம் அகலவில்லை.

சில வருடங்கள் சென்றன. பீர்பாலின் மகள் திருமண வயதை அடைந்தாள். அக்பர், பீர்பாலிடம் அவரது மகளுக்கு ஒரு நல்ல மருமகனைத் தேடச் சொன்னார். மாதக்கணக்கில் தேடிய பின் ஒரு நல்ல மருமகனைத் தேர்ந்தெடுத்தார். நிச்சயதார்த்த விழா நடந்தது. அது முடிந்த உடனே பீர்பால் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். தான் வாக்களித்தது போலவே அக்பர் நகைகள் செய்வது முதல் வீடு அளிப்பது வரை அனைத்து உதவிகளும் புரிந்தார்.

திருமண இரவன்று பிள்ளை வீட்டார் ஆடம்பர வரவேற்பு பெற்றனர். அவர்களுக்கு மிகவும் விலை உயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன. ஒரு பெரிய பானை நிறைய தங்க நாணயங்கள், உணவு அறையின் முன்னே வைக்கப்பட்டிருந்தது. விருந்தினர்கள் எவ்வளவு தங்க நாணயங்கள் வேண்டுமோ அவ்வளவை எடுத்துக் கொள்ளலாம் என்றனர்.

எல்லாம் நல்ல படியாக நடந்து முடிந்தது.

அடுத்த நாள் பீர்பால் அரசவைக்கு வந்தார். அன்றும் அவர் மிகுந்த வருத்தத்துடன் காணப்பட்டார்.

இப்போது என்ன ஆயிற்று? எனக் கேட்டார் அக்பர்.

நான் அன்று சொன்னவாறே பிள்ளை வீட்டார் குறை கண்டனர்! என்றார் பீர்பால்.

இவ்வளவு பணம் செலவழித்து ஆடம்பரமாக இருந்த திருமணத்தில் அப்படி என்ன குறை கண்டனர்! எனக் கேட்டார் அக்பர்.

பாதுஷாவே! அவர்கள் பெண்ணின் தந்தை கஞ்சத்தனம் வாய்ந்தவர் எனக் கூறினர். ஏனெனில் தங்க நாணயங்கள் வைத்திருந்த பானையின் கழுத்து மிகச் சிறியதாக இருந்ததாம்.

அதனால் அவர்களால் இரண்டு கைகளையும் உள்ளே விட்டு அவர்களுக்குத் தேவையான வரையில் திருப்தியாக எடுக்க முடியவில்லையாம்...! பீர்பால் பதிலளித்தார்.

அக்பர் மௌனமாக இருந்தார். கடைசியாக அவர் சொன்னார். நீ சொன்னது மிகவும் சரி பீர்பால்.

ஒரு பெண்ணைப் பெற்ற தந்தை என்றும் சந்தோசமாக இருக்கமாட்டார்.

### உண்மையான ஊழியன்

ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர் பீர்பாலுடன் அரண்மனைத் தோட்டத்தில் மெதுவாக உலா வந்து கொண்டிருந்தார். திடீரென அவர் கத்தரிக்காயை புகழ ஆரம்பித்தார்.

கத்தரிக்காய் மிகவும் சுவையான காய்கறி. அது உடம்பிற்கும் நல்லதாகும் என அக்பர் கூறினார்.

நீங்கள் சொல்வது சரி பாதுஷாவே! கத்தரிக்காய் மிகவும் சுவையான காய்கறி. கத்தரிக்காயை விட மிகச் சிறந்த காய்கறி வேறெதுவும் இல்லை! என்று பீர்பால் உடனே ஆமோதித்தார்.

ஆகா! எனக்கு பீர்பாலை சோதிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது! என அக்பர் தனக்குள் நினைத்துக் கொண்டார்.

சிறிது நாட்கள் கழித்து அக்பர் அரண்மனையில் கத்தரிக்காய்களை சமைக்க உத்தரவிட்டார்.

சமைக்கப்பட்ட கத்தரிக்காயை அரசருக்கு அளித்த போது அவர் கூறினார் இல்லை எனக்கு வேண்டாம்! எனக்குக் கத்தரிக்காய் பிடிக்காது. அவற்றில் விதைகள் நிறைய உள்ளன. மற்றும் அவற்றில் ஒரு சத்தும் இல்லை. இதனைப் பீர்பாலிடம் கொடுக்கவும். அவருக்கு கத்தரிக்காய் என்றால் மிகவும் விருப்பம்.

அந்த உணவு பீர்பாலுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அவர் தனக்கு வேண்டாம்



எனக் கூறினார்.

எனக்குக் கத்தரிக்காயே பிடிக்காது. நான் அவற்றை வெறுக்கிறேன்! என்று அவர் சொன்னார்.

அக்பர் பீர்பால் சொல்வதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்.

என்ன பீர்பால் அன்றொரு நாள் நீ கத்தரிக்காயை புகழ்ந்தாய். கத்தரிக்காயை விடச் சிறந்த காய்கறி எதுவுமில்லை எனச் சொன்னாயே! எனக் கேட்டார் அக்பர்.

பாதுஷாவே! நான் உங்களுக்குச் சேவகன். கத்தரிக்காய்க்கு அல்ல. நீங்கள் என்னை அமைச்சராக்கி எனக்குப் பரிசுகள் அளிப்பீர்கள். ஆனால் கத்தரிக்காய் அவ்வாறு செய்யாதே! என பீர்பால் குறிப்பிட்டார்.

பீர்பாலின் புத்திசாலித்தனமான பேச்சு அக்பருக்கு அவர் மீதிருந்த மதிப்பை அதிகரிக்க வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் கடும் மோதல்; 50 இற்கும் மேற்பட்டோர் பலி

(தர்பர்)

சூடானில் இராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

இரு தரப்பும் இறப்புகள் குறித்த விபரங்களை சொல்ல மறுத்துள்ளன. தர்பரின் கிழக்கு பகுதியை விட்டு போராளிகளை விரட்டியடிக்க நடந்த சண்டையில் 50 இற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டு விட்டனர் என அரசு கூறுகிறது.

ஆனால் அபு ஜப்ரவில் உள்ள எண்ணெய் கிடைக்கும் பகுதிகளுக்கு அருகில் மூன்று நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாக போராளிகள் தரப்பில் கூறப் படுகிறது.


கடந்த 2003 ஆம் ஆண்டு அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் முதன் முதலாக தொடங்கிய இந்த சண்டை தெற்கு சூடான் என்ற தனிநாடு கேட்டு இன்று வரை தர்புரி போராளி குழுக்கள் போராடி வருகின்றனர் என்று அரசு குற்றம் சாட்டியது.

ஜூபாவில் செயற்படும் இந்த இயக்கத்தின் தலைமை அந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது. கிழக்கு தர்பர் எல்லையின் மேலும் தெற்கு கொர்டோபன் பகுதியிலும் உள்ள இந்த எண்ணெய் கிடைக்கும் பகுதிகளை கையகப்படுத்தும் நோக்கில் தான் இங்கு சண்டை நடைபெற்று வருகிறது.

(அ-2)




# கானாவின் ஜனாதிபதி அட்டா காலமானார்



ஆபிரிக்க நாடான கானாவின் ஜனாதிபதி ஜோன் அட்டா மில்ஸ் (வயது 68) நேற்று முன்தினம் கால மானார்.

அட்டா மில்ஸ் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் கானாவின் ஜனாதிபதியாக பதவி வகித்தவர்.

தொண்டை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த திங்கட்கிழமை மாலை கடும் வலியினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் நேற்று முன்தினம் பிற்பகல் அவர் காலமானதாகவும் கானா ஜனாதி பதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவர் அண்மையில் வழக்க மான மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா வுக்கு சென்று திரும்பியிருந்தார்.

இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக காங்கிரஸ் சார்பில் மீண்டும் போட்டியிடுவதற்கு ஜோன் அட்டா மில்ஸ் அக் கட்சியினால் தெரிவு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முதலில் விண்வெளிக்குச் சென்ற அமெரிக்க பெண் மரணம்



அமெரிக்காவில் முதன்முதல் விண்வெளிக்குச் சென்று வந்த பெண் கணைய புற்றுநோயால் நேற்று முன்தினம் பரிதாபமாக இறந்தார்.

அமெரிக்காவில் முதன் முதலில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டவர் சாலி ரைட். லாஸ் ஏஞ்சல்சில் பிறந்து வளர்ந்த சாலி கடந்த 1978 ஆம் ஆண்டு நாசாவில் சேர்ந்தார். அதன்பின் கடந்த 1983 ஆம் ஆண்டு தனது 32 ஆவது வயதில் அமெரிக்க விண்கலம் சேலஞ்சரில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். அமெரிக்காவின் முதல் பெண் விண்வெளிப் பயணம் சென்றது வரலாற்றில் இடம்பிடித்தது. இவர் 61 வயதில் உயிரிழந்துள்ளார்.

(அ-2)

# இந்திய விஞ்ஞானிகளுக்கு அமெ.வில் ஜனாதிபதி விருது



(வோஷிங்டன்)

அமெரிக்க அரசாங்கம் அறிவியல் மற்றும் என்ஜினியரிங் துறையில் சிறந்து விளங்கும் விஞ்ஞானிகளை ஆண்டுதோறும் தேர்வு செய்து ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்படுவர்.

அதன்படி இந்த ஆண்டு விருது பெறும் 96 விஞ்ஞானிகள், ஆரா ய்ச்சியாளர்கள் பட்டியலை நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்தார். இந்த விருது பெறுவோர் பட்டிய லில் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரான ஸ்ரீதேவி விதுலசர்மா, பவான் சின்கா, பராக் ஏ.பதக், பிஜு பாரிக்கதான் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். ஸ்ரீதேவி விதுலசர்மா, பவான் சின்கா ஆகியோர் துணை பேராசிரியராக இருக்கிறார்கள். பராக் ஏ.பதக் தொழில்நுட்ப இன்ஸ்டிடியூட்டிலும் பிஜு பாரிக்கதான் ஹார்வார்டு மருத்துவ கல்லூரியிலும் முக்கிய பதவிகளில் பணியாற்றி வருகிறார்கள்.

(அ-2)

# அரசு,புரட்சிப்படைகள் இடையே கடும் மோதல்; 130 பேர் உயிரிழப்பு

(அலெப்போ)

சிரியாவின் வர்த்தக தலைநகரான அலெப்போயின் ஒரு பகுதியை புரட்சி படையினரிடமிருந்து மீட்க அரசுப்படையினர் தீவிர சண்டையில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள வரலாற்று புகழ்பெற்ற புராதன நகரை நோக்கிய புரட்சி படையினரது முன்னேற்றத்தை கட்டுப்படுத்த சிரியாவின் ஜெட் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் வான் வழி தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஆசாத்தின் முன்னாள் உதவியாளரும் பிரிகேடியர் ஜெனரலும் மனாப் மலஸ் தொலைக்காட்சியில் தோன்றி சுதந்திர ஜனநாயக சிரியாவை உருவாக்க அனைத்து சிரிய மக்களும் ஒன்றுபடவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் நெருங்கிய வட்டத்தில் இருந்த சன்னி பிரிவினரான அந்த பிரிகேடியர் மனாப் டலஸ் ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படுவது அங்கு எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. அவர் எங்கு தங்குகிறார் என்பது இன்னும் மர்மமாக உள்ளது.

கடந்த ஒரு வாரமாக புரட்சியாளர்களால் பிடிக்கப்பட்ட பகுதிகளை மீட்க அரசுபடையினர் முதன்முறையாக போர் விமானங்களை கொண்டு கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. தங்களின் தாக்குதலுக்கு பயந்து ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஓடுவதாக புரட்சி படையினர் கூறுகின்றனர்.

புரட்சியாளர்களின் கையிலிருந்து தலைநகர் டமாஸ்கஸின் பெரும் பகுதியை அரசு கைப்பற்றிவிட்டதாகவும் கூறியுள்ளது. கடந்த செவ்வாயன்று சிரியா முழுவதும் நடைபெற்ற தாக்குதலில் அலெப்போவில் 20 பேர் உட்பட மொத்தம் 130 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஹிலாரி கிளின்டன் புரட்சிப்படையினரால் பிடிக்கப்பட்ட பகுதிகள் அவர்களுக்கு பாதுகாப்பு பகுதியாக மாறியுள்ளதோடு அங்கிருந்து அவர்களால் அரசுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# கொர்னோ மலைப்பகுதியில் மோதல்; 42 பேர் உயிரிழப்பு

தஜிகிஸ்தான் நாட்டில் கொர்னா பதக்ஷான் மலைப்பகுதியில் இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இங்கு நடைபெற்ற வன்முறையில் பொதுமக்கள் பலர் உயிரிழந்திருக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது. உயர்பதவியில் உள்ள ஒரு அதிகாரி குத்திக் கொல்லப்பட்டதை அடுத்து அப்பகுதியில் டோலிப் ஐயோம்ப்கோவ் என்பவன் கீழ் செயற்பட்டு வரும் ஒரு முஸ்லிம் தீவிரவாத இய்க்கத்திற்கு எதிராக இது ஒரு இராணுவ தாக்குதலாக மாறியது.

பாதிக்கப்பட்டோர் தஜிக் தலைநகர் துஷான்பேயில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சண்டையில் 200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் அதில் இராணுவத்தினர் பாதி, பொதுமக்கள் பாதி என்றும் சொல்லப்படுகிறது.

ஆப்கான் எல்லையில் உள்ள இப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல் முக்கிய பிரச்சினையாக கூறப்படுகிறது. தலிபான் மற்றும் முஸ்லிம் ஆதரவில் செயற்படும் அப்பகுதியை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த சண்டையை அரசு நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

1991 இல் சோவியத் யூனியனிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் உள்நாட்டு போரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தஜிகிஸ்தான் மத்திய ஆசியாவின் மிக ஏழ்மையான நாடாகும். (அ-2)

# ஆசிப் அலி சர்தாரி மீதான விசாரணை உத்தரவை வாபஸ் பெற வேண்டும்

## பாகிஸ்தான் அரசு கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழலை விசாரிக்கும் உத்தரவை வாபஸ் பெற வேண்டும் என சுப்ரீம் நீதிமன்றில் பாகிஸ்தான் அரசு கோரியுள்ளது.

சர்தாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் கிலானி மீது நீதிமன்றம் அவமதிப்பு குற்றம் சாட்டப்பட்டு அவரது பதவி தகுதி நீக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து புதிய பிரதமராக அஷ்ரப் பதவி ஏற்றுள்ளார்.


சர்தாரி மீதான ஊழல் வழக்கை புதிய பிரதமர் அஷ்ரப் விசாரிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட் வற்புறுத்தியுள்ளது. இந்த வழக்கை அவர் விசாரிக்காவிட்டால் கிலானியைப் போல் இவரும் பதவி இழக்க நேரிடும். எனவே, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தலைவர்களை பாதுகாக்கும் வகையிலான மசோதா பாகிஸ்தான் பாராளுமன்றில் இருசபைகளிலும் நிறைவேற்றப்பட் டுள்ளது.

சுவிட்சர்லாந்து அரசுடன் பேசி ஜனாதிபதி சர்தாரி பதுக்கி வைத்துள்ள பணம் தொடர்பான தகவல்களை கடிதம் எழுதி பெற வேண்டும். இது தொடர்பான ஆவணங்களை அஷ்ரப் அரசு நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும். இதை செய்யத் தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகளை அஷ்ரப் மீது எடுக்க வேண்டியிருக்கும் என உச்ச நீதிமன்றம் கடந்த 12 ஆம் திகதி எச்ச ரித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பாகிஸ்தான் ஜனாதிபதி விவகாரத்தில் தலையிடுவதற்கு அந்நாட்டு புதிய பிரதமருக்கு 2 வார கெடு விதித்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 மரியாதை குண்டுகள் முழங்க புதிய ஜனாதிபதியானார் பிரணாப்



(புதுடில்லி)

இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி 72 சதவீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்று நேற்று காலை புதிய ஜனதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார்.

பதவி ஏற்பு விழா பாராளுமன்ற மைய மண்டபத்தில் நடந்தது. பழைய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், புதிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் ஜனாதிபதி மாளிகையில் இருந்து பாராளுமன்ற கட்டடத்துக்கு சம்பிரதாய முறைப்படி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

சரியாக காலை 11.30 மணிக்கு பிரணாப் முகர்ஜி புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றார். அவருக்கு தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா பதவிப் பிரமாணமும் இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பதவி ஏற்பின் போது ஜனாதிபதி எடுத்துக் கொண்ட உறுதி மொழி வாசகம்:-

நான் இந்திய குடியரசையும் சட்டத்தையும் பாதுகாத்து காப்பாற்றுவேன். இந்திய மக்களின் நலனுக்காக உழைப்பேன் என்று மனதார உறுதி கூறுகிறேன். கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன் என கூறினார்.

இதைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற பிரதீபா பாட்டீலின் இருக்கையில் பிரணாப் முகர்ஜி அமர்ந்தார். பின்னர் பிரணாப் முகர்ஜி பதவி ஏற்பு உரை நிகழ்த்தினார்.

அவர் பதவி ஏற்றுக் கொண்டதும் 21 துப்பாக்கி குண்டுகள் முழங்கின. நிகழ்ச்சிகள் முடிந்ததும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் பிரதீபா பாட்டீலும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஜனாதிபதி மாளிகை முன் பிரணாப் முகர்ஜிக்கு முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

விழாவில் பிரதமர் மன்மோகன் சிங், பாராளுமன்ற சபாநாயகர் மீராகுமார், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி, எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், மேற்கு வங்காள முதல்- மந்திரி மம்தா பானர்ஜி, முலாயம்சிங் யாதவ் மற்றும் மத்திய மந்திரிகள், கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்துகொண்டனர். (அ-2)

## "ஜெ" இன் வழக்கு ஒத்திவைப்பு

(பெங்களூர்)

ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு பெங்களூர் தனி நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

பெங்களூர் தனி நீதிமன்றத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு நீதிபதி மல்லிகார்ஜுனைய்யா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் நேரில் ஆஜராகாமல் இருக்க விலக்கு கோரி வக்கீல்கள் மனு தாக்கல் செய்தனர். அதை நீதிபதி ஏற்றார்.

அதை தொடர்ந்து வக்கீல் மணி சங்கர் வாதிட்டபோது இந்த வழக்கை விசாரணை நடத்தி வரும் தங்களின் நியமனம் சட்டப்படி சரியில்லை என்று நாங்கள் தாக்கல் செய்த மனு கடந்த 17 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்துள்ளோம்.

அந்த விசாரணை நிலுவையில் உள்ளது. ஆகவே உயர் நீதிமன்ற விசாரணை முடியும் வரை இந்த நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்றார். (அ-2)

# அசாமில் கலவரம் தொடர்கிறது; 30 ஆயிரம் ரயில் பயணிகள் தவிப்பு



(கவுகாத்தி)

அசாம் இனக்கலவரம் 5 ஆம் நாளாக நீடிக்கிறது. அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

அசாமில் சட்டம், ஒழுங்கை கட்டுக்குள் வைக்க தேவையான நடவடிக்கை எடுக்கும்படி முதல்வர் தருண் கோகாய்க்கு பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவிட்டுள்ளார்.

அசாம் மாநிலத்தில் பழங்குடி இனத்தை சேர்ந்த மாணவர், அணி தலைவர்கள் இருவர் மீது கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதை தொடர்ந்து இந்த மாவட்டத்தில் இரு பிரிவினருக்கும் இடையே பயங்கர கலவரம் மூண்டது.

70 வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. வீடுகளை விட்டு வெளியேறிய 50 ஆயிரம் மக்கள் 75 நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

கோக்ரஜார் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவும் கலவரக்காரர்களை கண்டதும் சுடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள மாவட்டங்களில் இரவில் மட்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தில் ஈடுபட்டவர்களை விரட்டியடிக்க பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில் 4 பேர் பலியாகினர். நிலைமையை ஆராய காங்கிரஸ், பா.ஜ. குழுவினரும் கலவர பகுதிகளுக்கு சென்றனர். கலவரத்தை கட்டுப்படுத்தும் பணியில் பொலிஸாருக்கு உதவியாக துணை இராணுவ படையினர் ஆயிரத்து 500 பேர் அசாம் மாநிலத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (அ-2)

# ராசா பிரதமருக்கு தவறான தகவலைத் தெரிவித்தார்

## 2 ஜி வழக்கில் சி.பி.ஐ.குற்றச்சாட்டு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக ஆ.ராசா பிரதமருக்கு தவறான தகவலைத் தெரிவித்தார் என்று சி.பி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது. டெலிகொம் நிறுவனங்களுக்கு 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு செய்த வகையில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி சி.பி.ஐ., மத்திய கண்காணிப்பு ஆணையம் போன்ற அமைப்புக்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் தொலைத் தொடர்பு துறை மந்திரி ஆ.ராசா மற்றும் இத்துறை அதிகாரிகள் சிலர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இதில் தனியார் ரெலிகொம் நிறுவனங்களுக்கு 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு செய்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. இதுவரை நடத்திய விசாரணையில் தொலைத்தொடர்பு துறை முன்னாள் மந்திரி ஆ.ராசா, பிரதமர் அலுவலகத்தை தொடர்ந்து தவறாக வழிநடத்தி இருப்பது தெரியவந்துள்ளது.

பிரதமர் அலுவலகத்துக்கு உண்மைகளை மறைத்து தவறான தகவல்களை அவர் அளித்துள்ளார் என சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. (அ-2)




# இந்திய தூதரக குடும்பத்தினர் சிரியாவில் இருந்து வெளியேற்றம்

## வெளிவிவகார அமைச்சு தகவல்

(புதுடில்லி)

சிரியாவில் உள்ள இந்திய தூதரக அலுவலர்களின் குடும்பத்தினரை அந்நாட்டிலிருந்து இந்தியா வெளியேற்றத் தொடங்கியிருக்கிறது என்று வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் புதுடில்லியில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் இப்போது நூற்றுக்கும் குறைவான இந்தியர்களே உள்ளனர். அதில் சுமார் 30 பேர் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் ஒவ்வொருவராக வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்று வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன் கூறினார்.

சிரியாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்த சமயத்தில் சுமார் 900 இந்தியர்கள் அந்த நாட்டில் இருந்தனர். இரு தரப்பினரிடையே மோதல் அதிகரிக்கத் தொடங்கியதும் இந்தியர்களை அங்கிருந்து வெளியேறுமாறு இந்திய தூதர் கேட்டுக் கொண்டார்.

வன்முறை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு இந்தியர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் கடந்த வாரம் அறிவுறுத்தியிருந்தது.

இதனைத் தொடர்ந்து இந்தியர்கள் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று வெளியுறவுத் துறை அமைச்சகம் இப்போது அறிவுறுத்தியிருக்கிறது. (அ-2)





இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி நேற்றைய தினம் பதவி யேற்றார்.

அன்றைய தினம் காந்தி சமாதியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அஞ்சலி செலுத்துவதையும் புதிய ஜனாதிபதிக்கு ஆதரவாக பொதுமக்கள் அணி திரண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை கீழேதள்ளிய குதிரையைத்தான் சவாரி செய்ய மனிதன் விரும்புவான்.
-ஸ்காட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அழிவில் இருந்து மீண்டு அபிவிருத்தி அடைய வேண்டுமாயின்...

இரண்டாம் உலகப் போரில் அணுக்குண்டு வீசப்பட்டு மிக மோசமாக அழிக்கப்பட்ட யப்பான் இன்று உலக நாடுகளுக்கே முன்மாதிரியாக விளங்கும் செய்திக்குள் இருக்கக்கூடிய உண்மைகள் குறித்து உலகம் முழுவதும் கவனம் செலுத்தி வருகின்றன.

எந்தவிதமான எதிர்ப்புகள், பாதிப்புகள் இல்லாமல் ஏற்படுகின்ற முன்னேற்றம் என்பது ஆய்விற்குரிய விடயமன்று.

மாறாக அழிவு மேட்டிலிருந்து துளிர்த்தெழுவதென்பது மிகவும் ஆச்சரியமானது.

அந்த துளிர்ப்பு விருட்சமாக மாறும்போது அது பிரமிப்பாகி விடுகின்றது.

அத்தகைய பிரமிப்பு யப்பானின் அபிவிருத்தி தொடர்பில் ஏற்படாமல் இருக்க முடியாது.

அதேநேரம் அழிவிலிருந்து ஏற்படுகின்ற எழுகை என்பது, நிரந்தரமானதும் நிறைபேறுடையதுமாகும்.

எனினும் சாம்பல் மேட்டிலிருந்து துளிர்ப்படைதல் என்பது சாதாரண விடயமன்று. அதற்காக செய்ய வேண்டிய தியாகங்கள், அர்ப்பணிப்புகள் ஏராளம் உண்டு.

அவ்வகையில் உரிமைக்காகப் போராடிய தமிழினம் தோற்கடிக்கப்பட்டாலும் எங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் ஈடுசெய்ய முடியாதவை எனினும்,

அந்த இழப்புகள், அழிப்புகளில் இருந்து எழுகை பெறுவதில்தான் தமிழ் இனத்தின் வெற்றியும் எதிர்காலமும் தங்கியுள்ளது.

அணுக்குண்டு வீச்சிக்கு பின் யப்பான் உலகைப் பிரமிக்க வைத்ததற்குள் இருக்கக்கூடிய யப்பானியர்களின் கடும் முயற்சி, கல்வி அறிவு, திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், நேர முகாமைத்துவம் என்பனவற்றுடன் ஒற்றுமை, ஒருமித்து எடுக்கும் தீர்மானம், எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் நடத்தப்படும் மீளாய்வு என்பன மிகவும் முக்கியமானவை.

எனவே, இனம்சார் பேதமையால் அழிக்கப்பட்ட ஓர் இனம் எழுச்சி பெற வேண்டுமாயின் அந்த இனத்துக்குள் ஒற்றுமையும் ஒருமித்த கருத்துடன்பாடல்களும் அதன் வழியான அபிவிருத்தித் திட்டங்களும் அமுலாக்கங்களும் அவசியம்.

தமிழ் அரசியல் தரப்புகளும் சமயத் தரப்புகளும் சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மண்ணை அபிவிருத்தி நோக்கி நகர்த்த எடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் என்னவென்று அனைவரும்கூடி சிந்தித்துக் செயலாற்ற வேண்டும்.

இதைவிடுத்து தனித்தனியாக நின்று இயங்கினால் எல்லாம் அதோகதிதான்.

ஆகையால் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு செயற்படுவதற்கேற்ற ஒரே அமைப்பு தோற்றம்பெற வேண்டும்.

# இலங்கை நிர்வாக சேவை

## நேர்முகத் தேர்வுக்கு 99 பேர் தேர்வு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு விசேடமாக கடந்த ஜனவரி 21, 22ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் 99 பேர் சித்தியடைந்து நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவானோரின் விபரங்களை www.pubad.gov.lk என்ற அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

**தெரிவானோரின் விபரம் வருமாறு:**

ஜி.ஆதவன்(861493458V), எஸ்.அகல்யா(826251573V), ஸ்ஸ்.அகமட்ஜுனைட்(820520564V), எஸ்.அகிலன் (833282085V), எஸ்.எம்.அல் அமீன்(851071679V), டி.சி.அரவிந்தராஜ் (861062457V), எம்.எம்.அஷிக்(870971605V), ரி.பாலராஜா (840403459V), ஜி.பார்த்தீபன்(833561863V), எம்.பாஸ்கரன் (832562831V), கே.பெடினியாகரன் (853243949V), ரி.இதயதாரணி (847914050V), எம்.ஐ.எம்.பசீல் (833380753V), எம்.ஐ.பிர்னாஸ் (832341010V),

என்.கஜித்ரா (857531663V), ரி.கீதலதா(837731054V), எம்.எம்.கருன்நிசா(838124429V), எஸ்.கம்சிதா (856721787 V), ஏ.எல்.ஹிப்திகார் பானு(826750537V), பி.ரி.எம்.இர்பான்(830194029V), கே.ஜகன்நாத்(840862550V), ஆர்.ஜெனார்த்தன்(851961534V), எஸ்.ஜன்ஸீர்(821302285V), ஜே.ஜெனிற்ரன்(860233215V), என்.ஜெயமயூரன்(822252745V), ஜி.கஜனி(866710570 V),கே.கலைதீபன்(851451722V), ஏ.கனிஸ்ரோ (832754943V),

கே.காந்தீபன்(852083271V), ஆர்.கர்ஜீன்(860782030V), ஆர்.லஜிதா(855272199V), ஏ.லதுமீரா (855982927V), எம்.மலர்வேணி (83583198V),எம்.மாலதி(868021144V), டி.மேரிநிசாந்தினி(837271681V), கே.மதுமிதா (828211730V), ரி.எஸ்.மயூரன் (862001630V), ரி.எம்.மொகமட் அன்சர் (85342 1669V), எஸ்.மொகமட் குஸ்றி (830650717V),

எம்.பி.மொகமட் முபாரக் (823390939V), ஜே.மொகமட் நிஷ்ரப் (813122634V), கே.முகமட் ரிப்தி(861753085V), எம்.ஏ. நஜீமா (827462292V), கே.நவநீதன் (850642540V), என்.நவதீதராஜா (862133048V), எம்.நிலுக்சி (866492697V), ஆர்.நிசாந்தன் (871351597V), ரி.நிஷாந்தன்(821584590V), என்.எம்.நவ்பீஷ்(851950338V), ஆர்.பகீரதி(848572390V),

ஏ.பர்தீப்ராம்(853433071V), எம்.பிரதீப்(842132380V), பி.பூலோகநாதன் (852933330V), எஸ்.பிரகாஷ் (843490468V),ஜி.பிரணவன்(822092888V), எல்.பிரசாந்தன் (828343637V), எஸ்.புவனேந்திரன் (860041189V), ஏ.ரி.எம்.ரபீ (861512428V), பி.ரகுநாதன் (820550412V), ஜே.ராஜமல்லிகை (827321168V),

எஸ்.ரஜீவ் (842623316V), ஜே.ராலிஜுதீன்(830633103V), ஆர்.ரமேஸ் (862321286V), எம்.ரஞ்சனா (828182366V), எஸ்.எச்.எம்.ரினோஸ் (830532447V), எம்.எஸ்.என்.ரிஷ்வானி (837120985V), எம்.எஸ்.எம்.சப்ராஸ் (840540678V), பி.சரவணன் (833202812V), எம்.சர்மிலா (865953470V), ஆர்.சசீலன் (862382137V), எஸ்.சத்தியகௌரி (857431286V), ஆர்.செந்தில் (831790130V), ஆர்.சர்வேஸ்வரா (830483063V), ஆர்.சியாமினி (828434683V), எம்.எஸ்.சில்மியா (846831282V), எஸ்.சிசிகரன் (833193481V), ஆர்.சிவகாமி (866123039V), கே.சிவகுமார் (820542223V), ஜி.சிவரஞ்சினி(826112901V), என்.சிவயோகநாதன் (845450463V), எம்.ஆர்.சியாகுல் ஹேக்(871091510V), ரி.சோபியா (845082332V), எம்.ரி.எவ்.சுகன்ஜா (876171740V),

கே.சுதர்சன்(851710922V), ரி.சுதர்சன்(833511769V), எஸ்.தக்ஷாயினி (846353364V), என்.தனஞ்சஜன்(813412314V), எஸ்.தனுஜன் (850152780V), ஜி.தர்சினி (868471336V), பி.தீவரதன்(862930576V),

சி.திவ்யன் (851262261V), ஏ.உதயரட்ணம்(847332468V), ஆர்.விக்னேஸ்வரன்(841162447V), ஆர்.விஜயகுமார்(862941705V), பி.விஜயதர்சினி (837230233V), வி.விசிதன் (853332712V), வி.யோகராஜா (850902259V), எஸ்.யோகேஸ்வரராஜா (821041384V), ஏ.சுகாஷ் (838461559V). (எ)

# ஊடகப் பட்டக் கல்வி ஆரம்ப விழா நாளை

பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று ஆரம்பிக்கின்ற ஊடக பட்டக் கற்கைநெறிகளுக்கான ஆரம்பவிழா நாளை மாலை 4 மணிக்கு இல.981, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரரில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருள்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பி.எஸ்.சி, எம்.ஏ.ஊடக பட்டப்படிப்புகளுக்கான பதிவுகளை மேற்கொண்டோர் தவறாது நேரத்திற்கு மேற்படி விழாவில் கலந்து பாட கைநூலைப் பெற்றுச் செல்லுமாறு பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரர் நிறுவன இயக்குநர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மேற்படி பட்ட கற்கைநெறிகளில் புதிதாகச் சேரவிரும்புவோரும் செய்தியாளர்களும், ஊடக ஆர்வலர்களும் மேற்படி விழாவில் கலந்துகொள்ளும்படி அழைக்கப்படுகின்றனர். (எ)

# அமெரிக்காவில் கருத்தாடல் களம்

(பொஸ்ரன்)


இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் இனத்தின் மீது நடந்தேறிய இனப்படுகொலை தொடர்பிலான கருத்தாடல் நிகழ்வு ஒன்று அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

பொஸ்ரன் பகுதியில் இடம்பெற்றிருந்த இக்கருத்தாடல் களத்தில், தமிழகத்தில் இருந்து பேராசிரியர் மணிவண்ணன், கனடாவில் இருந்து பேராசிரியர் சேரன் உட்பட அமெரிக்காவைச் சேர்ந்த வழக்கறிஞர் என பல வளவாளர்கள் பங்கெடுத்திருந்தனர்(எ-11)

# சத்திய தரிசனம்



மனதின் பரப்பு, அதன் விரிந்துகொண்டே செல்லும் எல்லை விபரிக்கமுடியாது. ஒரு கண நேரத்தில் அதனால் எத்தனை தூரம் வேண்டுமானாலும் பயணப்படமுடியும். அதன் சக்தி விபரிக்க முடியாதது. மனிதனின் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. மனதின் சக்தியின்றி எந்தவொரு செயலையும் நம்மால் செய்யமுடியாது. மனதிற்கு வடிவம் இல்லை. அது ஆத்மாவின் சக்தியால் இயங்குகிறது.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## செம்பருத்தி மருத்துவத் தாவரமா?

பொதுவாக வேலிகளில் மட்டும் காணப்படும் செம்பருத்தி மருத்துவத்தாவரமா? என்று கேட்கலாம்.செம்பருத்தியின் இலையோ, பூவோ உபயோகிப்பவர்கள் இன்று அதிகம் பேர் இல்லை. பண்டைக்காலத்தில் இதன் இலைகளைப் பறித்து நசுக்கித் தலையில் தேய்ப்பது வழக்கம்.

இன்று நவீன வேதிப்பொருட்களடங்கிய ஷம்பூ வந்ததும் செம்பருத்தி இலையை யாரும் நாடுவதில்லை. செம்பருத்திப்பூவும் மருந்தாக பயன்படுத்தியிருந்தனர். செம்பருத்திப்பூ அரைத்து பச்சரியும் கருப்புக் கட்டியும் சேர்த்து தேங்காய்ப்பாலில் காய்ச்சி அருந்தினால் இரத்தம் சுத்தமாகும் என்றும் உடல் பலப்படும் என்றும் ஆயுர்வேதம் கூறுகின்றது.


செம்பருத்திப்பூவில் தங்கத்தின் அம்சம் கலந்திருப்பதால் தினமும் உபயோகித்தால் உடலுக்குத் தங்கம் கிடைக்குமாம். இளைஞர்களுக்கு இது நன்மையளிக்கும் என்றாலும் இது கருத்தடை மருந்தாகச் செயற்படும் என்பதை அறிந்து கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து சம்பியன்

சாவகச்சேரி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. இந்த கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.


ஐந்து சுற்றுக்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலிரு சுற்றுக்களிலும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் முன்னிலை வகுத்து வந்தது. தொடர்ந்து நடைபெற்ற சுற்றுக்களின்போது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தனது ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கியது. மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற போட்டியின் அடுத்த சுற்றுக்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கியது. இந்தச் சுற்றுப் போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியைச் சேர்ந்த ஜெனகன் தெரிவு செய்யப்பட்டார்.





சாவகச்சேரி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு கழக அணியினரையும் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியினரையும் படங்களில் காணலாம்.

## வடமாகாண ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி



வவுனியா மாவட்ட அரசசேவைகள் விளையாட்டு அமைப்பு நடத்தும் வடமாகாண ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அரச திணைக்களங்கள் பங்கு பற்றும் இந்த சுற்றுப் போட்டிகளில் வடமாகாணத்தை சேர்ந்த 31 அணிகள் பங்குபற்றவுள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்....

## சென்ஜோன்சிடம் சுருண்டது மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி A அணிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி A அணியினர் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி A அணியினரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினரும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவர்கள் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டு இழப்பிற்கு 168 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

அதிகபட்சமாக மத்திய கல்லூரி அணி சார்பில் ஜெரு 91 பந்துகளுக்கு முகம் கொடுத்து 40 ஓட்டங்களையும் அலன்ராஜ் ஆட்டமிழக்காமல் 122 பந்துகளுக்கு முகம் கொடுத்து 64 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென்ஜோன்ஸ் A அணி சார்பில் லியோனி 2 விக்கெட்டினையும் நிலோசன், சைலுமி, பிரவீன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் A அணியினர் 39.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளினை மாத்திரம் இழந்து தமது வெற்றி இலக்கினை அடைந்தனர்.

அதிகபட்சமாக சென்ஜோன்ஸ் A அணி சார்பில் நிலோசன் 50 ஓட்டங்களையும் தேவப்பிரசாந் 47 ஓட்டங்களையும் ஜெனி பிளைமிங் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பில் கோமீதகன், அக்ஷத், கௌதமன், தனுஷன் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

## மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் யாழ். மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்கு பற்றும் ஆரம்பவிழா எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கழகத் தலைவர் எஸ். செல்வதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தின்ராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தின்ர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் ம.நவநீதமணி, மாலுசந்தி ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ். ஸ்ரீசண்முகதேவ், கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் எஸ். செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.காங்கரா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் பி.சந்திரபாபு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப்போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து இளவாலை சென்லூட்ஸ் அணியும் இரண்டாவது போட்டியில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளன. (3-24)






வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற [illegible] அணியையும் இரண்டாம் இடம் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 06 03 1948 இறப்பு 12 06 2012

அமரர் வீரகத்தி சுப்பிரமணியம்

கடந்த 12.06.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியோருக்கும், அஞ்சலிப் பிரசுரம் வெளி யிட்டோருக்கும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று 26.07.2012 வியாழக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இக்கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த் திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

செல்லந் தோட்டம்
கரணவாய் தெற்கு, கரவெட்டி

(சி-628)

# முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடங்கள்

கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை தலைவர், முல்லை. கிழக்கு, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கரைச் சிக் குடியிருப்பு முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்

1. பொது முகாமையாளர் 101/8

சம்பள அளவுத்திட்டம் 11200-14100
140 ×10-150 ×10

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது சமமான தகை மைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

இ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவன மொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

02) களஞ்சிய முகாமையாளர் 208/14

சம்பள அளவுத்திட்டம் 9700-11350
80 ×10-83 ×10

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப்பதவி யொன்றில் (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணம்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், வர்த்தக கணிதம், எண்கணிதம், சிங்களம்,தமிழ், மொழி என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

03) காரியாலய சேவகர் 317/17

சம்பள அளவுத்திட்டம் 8950-10300
65 ×10-70 ×10

**தகைமை**

அ) 8 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்

**நிபந்தனைகள்**

01. வயதெல்லை 18-45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (சங்க பணியாளர் களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

02.கூட்டுறவு சங்கங்களில் கடமைபுரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப் படிவம் அனுப்பப்படவேண்டும்.

03. விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும்.

04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேட படிகளும் வழங்கப்படும்.

05. மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:-2012.08.08

தலைவர்
முல்லைத்தீவு கிழக்கு,
பனை தொன்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கரைச்சி குடியிருப்பு முல்லைத்தீவு.

(சி-592)

## யாழ். அங்காடி வியாபாரத் தொகுதியில் தீ

# 47 லட்சம் பெறுமதியான புடைவைகள் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.முனீஸ்வரன் கோவில் வீதியிலுள்ள அங்காடி வியாபர நிலையத் தொகுதியிலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரண மாக மூன்று புடைவைக்கடைகள் எரிந்து நாச மாகின.

இதனால் சுமார் 42 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. இத் தீ விபத்துச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது 59ஆவது கடையின் மின் னாளி போடப்பட்டிருந்த நிலையில் அங்குள்ள ரேடியோவும் பாடிக்கொண்டே இருந்துள் ளது.

குறித்தக் கடையில் தற்காலிக மின் இணைப்பே காணப்பட்டதனால் இலகுவில் மின்னொழுக்கு ஏற்பட்டு அருகிலுள்ள கடை களுக்கும் பரவியுள்ளது.

குறித்த கடைத்தொகுதிகளில் ஏற்பட்ட தீ கொழுந்து விட்டு எரிந்து பரவிய போதும் உட



னடியாக யாழ்.மாநகரசபையின் தீ அணைப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீ அணைப்பு படையினரின் நீண்ட போராட்டத் திற்குப் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப் பட்டு முற்றாக அணைக்கப்பட்டது.

59ஆம் இலக்க புடைவைக் கடையொன் றில் ஏற்பட்ட மின்னொழுக்கே இத் தீ விபத்திற் குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

குறித்த அங்காடி கடைத் தொகுதியிலுள்ள 59 கடைகளுக்கும் பிரதான மின்னாளியாக ஒரு மின்னாளியுள்ளது. அனைவரது கடை யும் பூட்டப்பட்டதன் பின்னர் இது நிறுத்தப்படு வது வழமை. அதேபோல் குறித்த தினத்திலும் நிறுத்தப்பட்டு பின்னர் நேற்றுக்காலை குறித்த மின்னாளி மீண்டும் போடப்பட்டுள்ளது.

தீ அணைப்புப் படையினர் சம்பவ இடத் திற்கு வருவதற்கு சிறிது நேரம் தாமதித்திருந் தால் கூட அங்காடி வியாபார கடைத்தொகு தியிலுள்ள அனைத்துக் கடைகளும் எரிந்து நாசமாகியிருக்கும் என்பது குறிப்பிடத்தக் கது. (எ-4)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்) விபத்தில் மர்மமான முறையில்காயமடைந்தவர்சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

இவ் விபத்துச்சம்பவம் கடந்த 21ஆம் திகதியன்று கிளிநொச்சி பாரதிபுர பிரதான வீதி அம்பாள் குளத்தடியில் இரவு 9.30 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

இதில்மலையாளபுரம்கிளி நொச்சியினைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தை யாருமாகிய ஆறுமுகம் சசிகு மார் (வயது 28) என் பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த குறித்த குடும் பஸ்தரும் அவருடைய நண் பரும்தலைக்கவசமின்றிதமது வீட்டினை நோக்கி மோட் டார் சைக்கிளில் சென்று கொண் டிருக்கும்போது குறித்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் காய மடைந்த பிரஸ்தாப குடும்பஸ் தர் சிகிச்சைக்காக கிளி. வைத் திய சாலையில் அனுமதிக் கப்பட்டுபின்னர் அவர்மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்ட நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த குடும் பஸ் தருக்கு காயம் எதுவும் ஏற் படவில்லையென்றும்மூளை யில் ஏற்பட்ட இரத்த கசிவே இறப்புக்குக் காரணம் என் றும் இது இவ் விபத்தினால் ஏற் பட்டதாக தெரியவில்லை என்றும் மரண விசாரணை அதிகாரி கூறினார்.

இதேவேளை, மோட் டார் சைக்கிளில் சென்ற பாரதிபுரம் ஆலடியினை சேர்ந்த நபரை கைது செய்து விசாரணை செய்யுமாறு தான் பொலிசாருக்கு கூறி யுள்ளதாக மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி தெரி வித்தார். (எ-4)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

**July 2012 to December 2012**

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

(த-627)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி 28.07.2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.-இலங்கை...

கொழும்புடன் பாதுகாப்பு வர்த்தகத்தை விரிவாக்கவும் பாகிஸ்தான் முனைகிறது.

இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை வைத்துக் கொள்வதற்கு தமிழ்நாட்டிலுள்ள தமது பங்காளிக் கட்சியின் எதிர்ப்பை காங்கிரஸ் கூட்டணி அரசு எதிர்கொள்ளும் நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பாகிஸ்தான் சத்தமின்றி இலங்கைக்குள் நுழைந்துள்ளது.

அதேவேளை பாகிஸ்தான் உதவியுடன் ரி-55 டாங்கிகளின் இயந்திரங்களை மறுசீரமைத்தல் மற்றும் டாங்கிகளின் பீரங்கிகள் மற்றும் துப்பாக்கிகளின் சூட்டுக் கட்டுப்பாட்டுக் கருவிகளை நவீன மயப்படுத்துவது குறித்தும் இலங்கை கலந்துரையாடியுள்ளது.

கொழும்புக்கு எந்தவொரு பாதுகாப்பு உதவிகளையோ அல்லது தளபாடங்களையோ வழங்கக்கூடாது என்று சென்னைப் பங்காளிகள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு இலங்கையின் பாதுகாப்புத் துறைக்குள் பாகிஸ்தான் காலடி எடுத்துவைத்துள்ளது.

இந்த அழுத்தத்தினால் இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு செய்து கொள்ளப்படுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இந்தியா ருடே மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# கொழும்பில்...

தூண்டியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தைக் கண்டித்து சட்டத்தரணிகள் சங்கம் பணிப் பகிஷ்கரிப்பு ஒன்றிலும் ஈடுபட்டனர்.

வடக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைச்சர் றிசாத் பதியூதீனுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவத்துடன் தொடர்புடைய அமைச்சர் றிசாத் பதியூதீனைக் கைது செய்யாமைக்கு கண்டனம் தெரிவித்து நேற்றும் சட்டத்தரணிகள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஊர்வலமாகவும் சென்றனர்.

புதுக்கடை நீதிமன்ற வளாக வீதியை மறித்து சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு போக்குவத்து நெரிசலும் ஏற்பட்டது. (எ-11)

# மனிதக் கடத்த...

இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிடப்படும் சந்தேக நபர்கள் மூவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்ஏதனர்.

அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்காக மேற்படி 138 பேரிடமிருந்தும் தலா இரண்டு இலட்சம் முதல் 12 இலட்சம் ரூபாய் வரை மேற்படி சந்தேக நபர்கள் வசூலித்துள்ளார்கள் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

வெள்ளத்தம்பி சுரேஸ்குமார் (வயது 38), வெள்ளத்தம்பி சுதாகரன் (வயது 39) மற்றும் தண்டாயுதபாணி கரிகாலன் (வயது 39) ஆகிய மூவருமே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அரசியல்வாதியாகச் செயற்படும் அதேவேளை புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புடையவர் என்றும் மனித கடத்தல் மூலம் இவர் சுமார் இரண்டரைக் கோடி ரூபாயினை வசூலித்துள்ளார் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்றார். (எ-11)

# யாழ்.வாசி...

விமானம் மூலமாக குறித்த நபர் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளார்.

குறித்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரை தாம் பராமரித்துக் கொள்வதாகவும் நாடுகடத்தப்பட்ட இலங்கையரின் சகோதரி கோரியுள்ளார்.

நாடு கடத்தப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர் நாடுகடத்தப்பட்டமை தொடர்பில் அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை. (எ-11)

# அமைச்சர்...

கூறப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் கடந்த யூலை 16-ம் திகதி விடுத்த ஆணையை மாற்றுமாறு யூலை 17-ம் திகதி பிரதிவாதி, நீதவானுக்கு தொலைபேசி மூலம் கூறியுள்ளார்.

அத்துடன் யூலை 18-ம் திகதி தனியார் ஒருவரின் தொலைபேசியிலிருந்தும் நீதவானுக்கு இன்னொரு அழைப்பு வந்துள்ளது.

பிரதிவாதி யூலை 18-இல் நீதி சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரைச் சந்தித்து மன்னார் நீதவானை உடனடியாக இடமாற்றம் செய்யும்படியும் கேட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பிரதிவாதி, நீதிசேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

இவை எல்லாம் நீதித்துறையினதும் நீதிமன்றங்களினதும் முறையான செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு என மனுதாரர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-11)


## தேவை

நல்லூர் உற்சவ கால புத்தகக் கடை ஒன்றினை நேர்மையுடன் நடத்த ஒருவர் தேவை. (ஆண்/பெண்)

0718474325

DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

A/L - 2012

பௌதிகவியல் - N. பாபு

• யூலை - 28, 29

(சனி, ஞாயிறு - 12:15 pm)

♦ பிரதானமான விடயங்கள் ஆராயப்படும்.

♦ வெளி மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படும்.

யாழ்.நகரில்........!

மல்டிமீடியா கல்வி

நேரடி ஸ்கொலர்ஷிப்

கட்டணக்கழிவுடன்

65% வரை



கிராபிக்ஸ்

அனிமேஷன்

ஸ்பெஷல் எபெஃக்ஸ்

மல்டிமீடியா

CSC-ASIAN COMPUTER EDUCATION

AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

India's No.1 Animation Academy

JOB ASSISTANCE 100% CREATIVITY

Audio & Film Editing

Web Design & Development

Web & Cartoon Animation

Graphics Design

2D & 3D Animation

Digital Pre-Press

Mastering Multimedia

யாழ்.நகர் [illegible]


# நல்லூரில் திருடிய...

ஆலய நிர்வாகத்திடமும் ஆலய சூழலில் உள்ள பொலிஸ் பாதுகாப்பு பிரிவிலும் முறையிடப்பட்டது.

குறித்த திருட்டுச் சம்பந்தமாக உடனடியாக யாரும் கைது செய்யப்படாததோடு குறித்த திருட்டுக் கும்பலினை இனம் காண்பதற்கு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் களத்தில் இறக்கப்பட்டனர்.

இதையடுத்து புத்தளத்தினைச் சேர்ந்த நான்கு பெண்கள், 3 ஆண்கள் கொண்ட கும்பல் ஒன்று நல்லூரில் திருடிய நகையுடன் ஏ9 பாதை வழியாக ஹயஸ் வானின் தப்பிச் சென்று கொண்டிருக்கின்றது என்ற தகவல் கிடைக்கப்பெற உடனடியாக செயற்பட்ட பொலிஸார், குறித்த வானை பின்தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பளையில் வைத்து ஹயஸ் வானோடு மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்படி இவர்கள் புத்தளத்தினைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்தது.

இவர்களிடம் இருந்து 14 பவுண் பெறுமதியுடைய 4 தங்கச் சங்கிலிகளும் மீட்கப்பட்டது.

மேலும் இவர்களுடன் கைக்குழந்தை ஒன்றும் காணப்பட்டதாகவும் இவர்கள் அனைவரும் இன்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-4)

# குண்டு மழை...

கூட்டணி ஆட்சியை அகற்றும்வரை தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும்.

அதுவே எங்களின் தலையாய கடமை. குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்கள் கட்சி வாக்களித்த வேட்பாளர் பிரணாப் வெற்றி பெற்றார் என்பதற்காக தி.மு.க.எம்பி. கனிமொழி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை முள்ளிவாய்க்காலில் குண்டு மழை பொழிந்தாலும் அவர்களுக்கும் அவர் வாழ்த்துத் தெரிவிப்பார்.

இந்தியாவின் வீழ்ச்சிக்கு தி.மு.கதான் பொறுப்பு என்றார். (எ-11)

# முறையான செயன்...

வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட விடுதலைப்புலிச் சக்திகளும், சில புலம்பெயர்ந்த தமிழ்குழுக்களும் சுயநலன் கொண்ட ஏனையோரும் பல்தரப்பு செயன்முறைகளை தமது குறுகிய நோக்கங்களுக்காக செய்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என ஐ.நாவுக்கான இலங்கையின் புதிய நிரந்தர வதிவிட பிரதிநிதியான ரவிநாத ஆரியசிங்க கூறியுள்ளார். (எ-11)

# வடக்கில் ஜனநாயகம்...

அரசியல் அமைப்பின் 18-வது திருத்தம் நாட்டின் குற்றச் செயல்கள் பெருமளவு அதிகரிக்கக் காரணமாகியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய நேற்றுக் கூறினார்.

17-வது திருத்தத்தில் கூறப்பட்ட சுதந்திரமான ஆணைக்குழுக்கள் நாட்டில் குற்றச் செயல்களைக் குறைக்கவும் அரசாங்கத்தில் உள்ள ஊழலைக் குறைக்கவும் தேவையானவையாக இருந்தன.

அரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கு பதவிகளையும் பதவி உயர்வுகளையும் வழங்கியதால் நாடு இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோது கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் இன்றைய அரசாங்கத்தின் ஆதரவாளர்களுக்கும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் என வெவ்வேறு சட்டங்கள் உள்ளன.

பதவிக் காலம் முடியும் முன்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது வீண்விரயமாகவுள்ளது.

உண்மையில் வடக்கில் உள்ள மக்கள் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். அங்குதான் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுமாயின் அங்கு மீண்டும் ஒரு பிரபாகரனோ, பொட்டு அம்மானோ உருவாகலாம்.

முன்னர் அரசாங்க ஊடகங்களில் எமக்கு ஆகக்குறைந்த அளவில் சில நிமிடங்கள் அல்லது ஒரு பக்கமாவது கிடைத்து வந்தது.

இப்போது எமக்கு அதுகூடக் கிடைப்பதில்லை.

அரசாங்க ஊடகங்கள் எம்மீது அவதூறு கூற பயன்படுத்தப்படுகின்றன என அவர் மேலும் கூறினார். (எ-[illegible])

## மரண அறிவித்தல்

### திருமதி பேரம்பலம் மாணிக்கம்



ESP நிறுவன ஸ்தாபகர் பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவி பேரம்பலம் மாணிக்கம் நேற்று புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்


மாபெரும் இலவசக் கருத்தரங்கு A/L 2012

| பொருளியல் | கணக்கீடு |
| --- | --- |
| திரு.S.S.சிறி | திரு.S.S. கருணதாஸ் |
| | B.B.A.(Hons) P.G.Dip.Edu (Distinction) |
| சனி 1.00pm - 5.30pm -28th July | வெள்ளி 1.00pm -5.30pm -27th July |

இடம்: யாழ்ப்பாண கல்லூரி (வட்டுக்கோட்டை)

♦ மாணவர்கள் இலகுவாக புள்ளியை பெறுவது தொடர்பான வழிகாட்டல்

♦ மாதிரி வினா விடைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்: 0773722104


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org